மனிதமே முதன்மை!

# முற்றம்

பல்சுவை இதழ்

இல்லம் : 7 சுற்றம் : 1 / சனவரி 2019 / ஆசிரியர் : விசவனூர் **வே.தளபதி** / விலை : ரூ.10/-

## எட்டுவழிச்சாலையின் மர்மம் என்ன?





174 நெல் ரகங்களை மீட்டெடுத்தவர் நெல் ஜெயராமன்



சாதி அமைப்பு முறையை அலசிய இயக்குநர் பா.ரஞ்சித்




அறநெறி மக்கள் கட்சி நடத்திய இயேசு கிறித்து பிறந்தநாள் விழா நிகழ்வில் எழுச்சித்தமிழர் தொல். திருமாவளவன் அவர்கள்.

மனிதமே முதன்மை!
# முற்றம்
பல்சுவை இதழ்
Mutram monthly January 2019

ஆசிரியர்
**விசவனூர் வே.தளபதி.**
இணை ஆசிரியர்கள்
பேராசிரியர் **அப்பாத்துரை**
**அ.வெற்றிவேந்தன்** எம்.ஏ., பி.எல்.,
துணை ஆசிரியர்
**இமயவரம்பன்** பி.எஸ்சி.,எம் .ஏ.,பி.எல்.,
உதவி ஆசிரியர்கள்
**அ. உமாமகேசுவரி** எம் .ஏ.,
**ஜெ. ராஜாசிங்,**
**ஆரோக்கிய சார்லஸ்**
தலைமைச் செய்தியாளர்கள்
**வே. வளையாபதி**
**த. ஞானமணி** பி.எஸ்.சி., பி. எட்.,

செய்தியாளர்கள்
**பொன்முடி** சிவகங்கை
A.**அமல்ராஜ்**
**க. பவானி** எம்.ஏ.,
**சரவணன்** பூவிருந்தவல்லி
**சிவக்குமார்** மதுரை
**ரஞ்சித் இமானுவேல்**
**சாதிக்பாட்சா** கோவை
**மு.கலைச்செல்வன்**
**வே.பால்ராஜ்** மதுரை
**ஞா. ஜான்சன் டேவிட்** மதுரை
**ராஜா சாக்ரடீஸ்** தஞ்சை
**அருணகிரி** திருவள்ளூர்
**லூக்காஸ்** அம்பத்தூர்
சைதை **சு.மணிமாறன்**
**எஸ்தர்ரோஸ்லின்**
வடிவமைப்பு
**எழில் வரைகலை**
புகைப்படக்காரர்
**தாஸ்**

அலுவலக முகவரி
எண் 124, சுப.வீ. தெரு, (என்.டி.ஆர். தெரு),
ரங்கராஜபுரம்,கோடம்பாக்கம், சென்னை- 24
பேச: 8056281973, 044 42154408.
மின்னஞ்சல்: mutram2010@gmail.com
இணைய தளம் : **www.mutram.in**

MUTRAM
Indian Bank Account No,CA 920493454.
IFSC : IDIB000KI41
Rangarajapuram branch. Kodambakkam, chennai

## உள்ளே

தமிழர் உரிமைப் பறிப்பு (தலையங்கம்) .......... 4

அதிகாரம் செய்வதை அறவே வெறுத்த திரு.வி.க.
– பீம பெருமாள். .......... 6

174 நெல் ரகங்களை மீட்டெடுத்தவர் நெல் ஜெயராமன்
– சைதை மணிமாறன். .......... 8

எட்டுவழிச்சாலையின் மர்மம் என்ன?
அரங்க.குணசேகரன். .......... 11

இவர்களும் மாவீரர்கள்தான்
–பாலன் (இலண்டன்) .......... 15

புற்றுநோய்க்கு புதிய மருந்து .......... 18

துரோகங்களால் வீழ்ந்த ட்ராட்ஸ்கி
– வைகோவின் அழகான சொற்சித்திரம் .......... 20

பி.ஜே.பின் சத்தம் என்ற சத்த சுத்தமான பொய்
– அருள்மொழி .......... 22

முதல் மாவீரர் லெப்.சங்கர் .......... 24

சாதி அமைப்பு முறையை அலசிய
இயக்குநர் பா.ரஞ்சித்
– கலிபூங்குன்றன் (திராவிடர் கழகம்) .......... 26

தொல்காப்பியம் சுட்டும் ஆறு அறிவுகள்
– பீமபெருமாள் .......... 30

இந்தியப் பல்கலைக்கழகங்களில்
தமிழ் இருக்கைகளின் நிலை .......... 32

தமிழோசை
ஆரோக்கிய சார்லஸ். .......... 34

முற்றம் இதழில் வெளியிடுவதற்காக அனுப்பப்படும் படைப்புகளைத் திருத்துவதற்கும் வெளியிடாமல் இருப்பதற்கும் ஆசிரியருக்கு முழு உரிமை உண்டு.

*– ஆசிரியர்*

காசோலை, வரைவோலை
அனுப்புவோர் "mutram" என்ற பெயருக்கு
எடுத்தனுப்பலாம்.



# தமிழர் உரிமை பறிப்பு



ஒவ்வொரு ஆண்டும் ஆளுநர் உரை, ஆளும் அரசின் தயாரிப்போடுதான் சட்டமன்றத்தில் வாசிக்கப் பட்டு வருகிறது. அதுவே இந்தமுறையும் நடந்திருக்கிறது. ஆண்டின் தொடக்கத்தில் அறிவிக் கப்படுகிற அறிவிப்புகள் குறிப்பிட்ட காலத்திற்குள் நிறைவேறினால்தான் அந்த அறிக்கைக்கு மதிப்பு என்பதை அரசு உணர்ந்து செயல்பட வேண்டும். அறிவிக்கிற சில திட்டங்கள் நல்லவை போன்று தோன்றினாலும் சற்று ஊடுருவிப் பார்த்தோமானால் அதில் தமிழர்க்கு கேடு விளைவிக்கும் உள்ளீடுகள் காணப்படும். நாம், ஆய்ந்து, அறிந்து செயல்பட வேண்டும்.

பொங்கல் வைப்பதற்கான பொருட்களுடன் பொதுவிநியோக அட்டைக்கு பணம் ஆயிரம் என்று அறிவிக்கப்பட்டு தொடர்ச்சியாக பல திட்டங்களை ஆளுநர் வாசித்திருக்கிறார். சென்னை துறைமுகம் மதுரவாயல் இடையேயான உயர்தள வழித்தடம், சென்னை, கன்னியாகுமரி தொழில் வழித்தடத் திட்டம், கிழக்கு கடற்கரைச் சாலையை நான்கு வழி தேசிய நெடுஞ்சாலையாக தரம் உயர்த்துவதற்கான திட்டங்களுக்கு முன்னுரிமை அறித்து, விரைவாக செயல்படுத்த நடுவண் அரசைக் கேட்டுக் கொள்வது, ஜெர்மன் வங்கியின் உதவியுடன் போக்குவரத்துக் கழகங்களை மறுசீரமைக்க, ஒரு விரிவான திட்டத்தை அரசு செயல்படுத்த உள்ளது, பழைய பேருந்துகளுக்குப் பதிலாக எரிபொருள் செயல்திறன் மிக்க பி.எஸ் 6 பேருந்துகளை பயன்பாட்டிற்கு கொண்டு வருவதுடன் சென்னை, கோவை, மதுரை போன்ற மாநகரங்களின் சுற்றுச்சூழலைப் பாதிக்காத மின்சார பேருந்துகளும் இத்திட்டத்தில் கொள்முதல் செய்யப்படும் என்று அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம் மாவட்டங்களில் உள்ள குடிசைப்பகுதிகளை மேம்படுத்த, உலக வங்கி உதவியுடன் தமிழ்நாடு வீட்டுவசதி, வாழ்விட மேம்பாட்டுத்திட்டம் என்ற

விரிவான வீட்டுவசதி வழங்கும் திட்டத்தை இந்த அரசு வடிவமைத்து உள்ளது. சென்னை பெருநகரப் பகுதிகளைத் தவிர்த்து, மாநிலத்தின் மற்ற பகுதி களிலும் இதுபோன்றதொரு திட்டத்தை செயல்படுத்த ஆசிய வளர்ச்சி வங்கியின் நிதியுதவியை இந்த அரசு நாடி உள்ளது என்றார் ஆளுநர்.

கர்நாடகாவில் உள்ள மேகதாதுவில் புதிய அணை கட்டுவதற்காக, விரிவான திட்ட அறிக்கையை கர்நாடக அரசு தயாரிக்க, அண்மையில் ஒப்புதல் அளித்துள்ள மத்திய நீர் ஆணையத்தின் நடவடிக் கையை இந்த அரசு கடுமையாக எதிர்க்கிறது. மாநிலங்களுக்கு இடையேயான நதிநீர்ப்பகிர்வில், 'கீழ் படுகை மாநிலங்களுக்கு முறையாகக் கிடைக்க வேண்டிய நதிநிர் கிடைப்பதில் பாதிப்பு ஏற்படும் வகையில் மேல் படுகையில் உள்ள மாநிலம் எந்த நடவடிக்கையும் எடுக்கக்கூடாது' என்ற காவிரி நடுவர் மன்ற ஆணையின் மீதான சுப்ரீம் கோர்ட்டு உத்தரவினை வெளிப்படையாக மீறுவதாக இந்தச் செயல் அமைகிறது.

கர்நாடக அரசு, மத்திய நீர் ஆணையத்தின் இந்த நடவடிக்கையை கண்டனம் செய்வதுடன், கர்நாடக அரசுக்கு அளித்த அனுமதியை மத்திய நீர் ஆணையம் உடனடியாகத் திரும்பப் பெற உத்தரவிடக்கோரி மத்திய அரசை வலியுறுத்தியும் தமிழ்நாடு அரசின் சம்மதமின்றி காவிரி நடுவர் மன்றத்தின் உறுதி ஆணையையும் சுப்ரீம் கோர்ட்டின் உத்தரவையும் மீறி கர்நாடகாவில் மேகதாதுவிலோ, காவிரி வடிநிலப் பகுதியில் வேறெந்த இடத்திலோ, எந்த ஒரு பணியை யும் கர்நாடக அரசோ அல்லது அதன் அமைப்புகளோ மேற்கொள்ளக்கூடாது என்று கர்நாடக அரசுக்கு மத்திய அரசு உத்தரவிட வேண்டும் என்று இச் சட்டமன்றப் பேரவை ஒருமனதாகத் தீர்மானம் நிறை வேற்றியுள்ளதை நான் சுட்டிக்காட்ட கடமைப் பட்டுள்ளேன்.

முல்லை பெரியாறு அணைக்கு மாற்றாக, புதிய அணை கட்டுவதற்கான கேரள அரசின் முயற்சியை இந்த அரசு தொடர்ந்து எதிர்த்து வருவதோடு, முல்லை பெரியாறு அணையின் நீர்மட்டத்தை 152 அடிக்கு உயர்த்துவதற்கான உறுதியான நடவடிக்கையை இந்த அரசு தொடர்ந்து மேற்கொள்ளும்.


வாகன உற்பத்தித் துறையில் தமிழ்நாடு முக்கிய மையமாக விளங்கும் நிலையில், அடுத்த தலைமுறை மின்சார வாகனங்கள் தயாரிப்பதை ஊக்குவிக்க சிறப்பு சலுகைகளுடன் கவனம் செலுத்தப்படும். சென்னை வர்த்தக மையத்தில், இம்மாதம் 23, 24ஆம் நாட்களில் இரண்டாவது உலக முதலீட்டாளர்கள் மாநாடு நடைபெற உள்ளது. சப்பான், தென்கொரியா, ஆசுதிரேலியா, பிரான்சு, இங்கிலாந்து ஆகிய நாடுகள், 2019 ஆம் ஆண்டு மாநாட்டின் பங்களிப்பு நாடு களா கப் பங்கெடுக்க உள்ளன என்று ஆளுநர் வாசித் திருக்கிறார்.

பாதுகாப்புத் தளவாடங்களைத் தயாரிக்கும் தொழில் பெருமையங்களை, சென்னை வேலூர் சேலம் ஓசூர் கோவை திருச்சி வழித்தடத்தில் நிறுவுவதன் மூலமாக, தமிழ்நாட்டை பாதுகாப்புத் தொழில் துறையில் மாபெரும் சக்தியாக உருவாக்க வாய்ப்புகள் ஏற்படும். இந்தப் பாதுகாப்புத் தொழில் வழித்தடத் திட்டத்தைச் செயல்படுத்துவதை மத்திய அரசு துரிதப்படுத்த வேண்டும் என்றும் ஆளுநர் வாசித்தார்.

எட்டுவழிச்சாலை எதற்கு என்பதை ஆளுநர் தெளிவாகவே கூறியிருக்கிறார். தமிழகத்தில் பாது காப்புத் தளவாடங்கள் தயாரிப்பு என்ற பெயரில் நிறுவனங்களை அமைப்பது, சாலைத் திட்டங்களை நிறைவேற்றுவது, அவற்றில் வேலை செய்ய மற்ற மாநிலத்தவரை அமர்த்துவது, இறுதியில் தமிழர்களை தாய்நாட்டில் கடைநிலை குடிமக்களாய் மாற்றுவது என்று, தமிழர்களின் வாழ்வழிப்புத் திட்டங்களை? நிறைவேற்ற முனைகிறார்கள் மனுவாதிகள். இதை தமிழர்கள் புரிந்து செயல்பட வேண்டும்.



# அதிகாரம் செய்வதை அறவே வெறுத்த திரு.வி.க...!



1910ஆம் ஆண்டில் ஆயிரம் விளக்கு வெஸ்லியன் மிஷன் பள்ளியில் ஐந்தாம் வகுப்பு ஆசிரியப் பணியாற்றி வந்தார் திரு.வி.க. ஆறாண்டுகள் அங்கே ஆசிரியப் பணியாற்றியுள்ளார்.

தலைமை ஆசிரியர் ஜான் ரத்தினம் என்பவர் திரு.வி.க.விடம் "இந்தப்பள்ளி ஒரு தமிழ்ப்புலவரை பெற்றமைகுறித்து ஆண்டவனுக்கு நன்றி செலுத்துகிறேன்." என்று கூறியுள்ளார்.

பள்ளியின் சூழ்நிலை இன்பம் பயப்பதாகவே அமைந்திருந்தது. அதிகாரம், ஆக்கிரமிப்பு செய்யாமல் அன்பே ஆட்சி செய்து வந்தது. ஆசிரியர்களும் சலியாது உழைத்து வந்தனர்.

ஒருமுறை பள்ளியில் சோதனை செய்ய அதிகாரி வந்திருந்தார். அவரைக் கண்டால் யாவர்க்கும் அச்சமும் திகிலும் உண்டாகும். அவரை ஆசிரியர்கள் 'புலி' என்றே அழைப்பர்.

புலி வந்தது. வகுப்புகளைக் கலக்குகிறது. திரு.வி.க.வின் வகுப்புக்கும் வந்தது.

இவ்வகுப்புக்கு டிக்டேசன் போடுக என்றார் புலியார். அவ்வாறே செய்தார் திரு.வி.க. புலியார் அடுத்த வகுப்புக்குச் சென்றார். புலியார் இட்ட பணி முடிந்தவுடன் திரு.வி.க. எதிரேயுள்ள தன் வகுப்புக்குச் சென்றுவிட்டார்.

புலி திரும்பி நான்காம் வகுப்புக்கு வந்தது. திரு.வி.க. அங்கு இல்லை. எதிர் பக்கத்திலுள்ள வகுப்பில் இருந்தார். அவரைக் கை காட்டி அழைத்தது புலி. ஏன் அவ்வகுப்புக்குப் போனீர்? என்றார் புலியார். அஃது என் வகுப்பு என்றார் திரு.வி.க.

"யான் உம்மை அழைத்து இங்கே ஒரு வேலை கொடுத்தேன். மீண்டும் என் கட்டளை பிறக்கும்வரை நீர் இவ்வகுப்பிலேயே இருத்தல் வேண்டும். நீர் உமது

வகுப்புக்குச் சென்றது தவறு. என்று கண்டிப்புரை வழங்கினார் புலியார்.

பின்னர் பலகைகளை எடுத்தார். அவை திருத்தப்படாமல் இருப்பதனைக் கண்டார்.

"ஏன் திருத்தவில்லை"? என்று கேட்டது புலி.

"திருத்தும்படி நீங்கள் சொல்லவில்லை", என்றார் திரு.வி.க.

"டிக்டேசன் என்றால் அதில் திருத்தலும் அடங்கும். இது தெரியாதா?" என்று கடாவியது புலி.

திரு.வி.க. ஒன்றும் பேசவில்லை. ஆங்கொன்றும் ஈங்கொன்றுமாகப் பலகைகளை எடுத்துப் பார்த்துவிட்டு "போம்" என்றது புலி.

திருவி.க. தன் வகுப்புக்குச் சென்றார்.

புலி இவ்வகுப்புக்கும் அவ்வகுப்புக்கும் ஓடி ஓடிச்சென்று ஆசிரியர்மாரைக் குலை நடுங்கச் செய்தது.

முதல்நாள் முடிந்தது. இரண்டாம் நாள் வந்தது. புலியாரும் போந்தார்.

"என்ன பாடம்?" கேட்டார் புலியார்.

"கணக்கு" என்றார் திரு.வி.க.

கரும்பலகையில் எழுதியிருந்த கணக்கை அழித்தது புலி. வேறு கணக்கைப் பொறித்தது. "சீக்கிரம், சீக்கிரம்" என்று மாணாக்கர்களை விரட்டியது. சோதித்து விடையை, முடிந்தது வேலை.

மனக்கணக்கொன்று போட்டார் புலியார். விடையை அவரே பார்வையிட்டார்.

எம்முறையில் விடைகண்டாய்? வினவினார் புலியார். ஒரு மாணாக்கனை அருகில் அழைத்தார், அவன் முறையைச் சொன்னான். அடுத்த மாணாக்கனை அழைத்துக் கேட்டார், அவனும் முறையைச் சொன்னான்.

"இம்முறை உம்மால் போதிக்கப்பட்டதா?" கேட்டார் புலியார். "ஆம்" என்று பகர்ந்தார் திரு.வி.க.

"முறை தவறு" என்றார் புலியார்.

"மனக் கணக்கிற்குரிய முறைகள் பலவிதம். அவை வகுப்புக்கேற்றவாறு போதிக்கப்படும்" என்றார் திரு.வி.க.

"கணக்கில் நீர் பட்டம் பெற்றவரா? பதக்கம் பெற்றவரா?" என்று புலியார் சீறியதோடு நில்லாமல், "யான் சொல்வதைக் கேளும்" என்று தமது முறையை வெளியிட்டார்.

"இம்முறை இவ்வகுப்புக்குப் பொருந்தியதன்று" பட்டெனப் பகர்ந்தார் திரு.வி.க.

"அப்படியா!" உறுமியது புலி, உறுமிவிட்டு வெளியே சென்றது. "புலி பூனையாகுமா சிங்கமாகுமா?" இவ்வாறு எண்ணினார் திரு.வி.க.

"என்னைத் தாங்கள் பள்ளியை விடுத்து அகற்றலாம். அதைப்பற்றிய கவலை எனக்குக் கிடையாது. யான் அன்புக்கு எளியன், அநியாய அதிகாரத்துக்கு எளியனல்லன். அதிகாரத்துக்கு அஞ்சி மானம் விற்கும் நிலைமையை என் பிறவி பெறவில்லை. என் முறையை அதிகாரத்திமிரால் தாங்கள் அலட்சியம் செய்தல் கூடாது. எந்த மேடையிலும் என்முறை பொருந்திய தென்பதை வலியுறுத்தச் சித்தமாயிருக்கிறேன்" என்ற கருத்துச் செறிய ஒரு கடிதத்தில் எழுதி அதைப் புலியாகி ஆய்வாளரிடம் சேர்க்கும்படி ஒரு பையனிடம் கொடுத்து அனுப்பிவிட்டார் திரு.வி.க.

மத்தியானம் மணி அடித்தது. உணவு உட்கொள்ள யாவரும் சென்றனர். திரு.வி.க. உணவு உண்டுவிட்டு, தோட்டத்திலுள்ள படியொன்றில் அமர்ந்த எண்ணத்தை எண்ணமெல்லாம் எண்ணிக் கொண்டிருந்தார்.

ஓர் ஆள் ஓடி வந்து தலைமை ஆசிரியர் அழைக்கிறார் என்று திரு.வி.க. விடம் சொன்னான். திரு.வி.க.சென்றார். அங்கே தலைமை ஆசிரியருடன் ஆய்வாளர் காணப்பட்டார்.

"இவர் இன்ஸ்பெக்டர். நாம் ஆசிரியர்" என்று தொடங்கினார் தலைமை ஆசிரியர்.

"அதனால்" குறுக்கிட்டார் திரு.வி.க.

"தலைமை ஆசிரியர் வார்த்தை முடியட்டும்", என்றார் ஆய்வாளர். திரு.வி.க.பேச்சை நிறுத்திக் கொண்டார்.

"யானைக்கும் அடி சறுக்கும். மறதி என்பது எல்லோர்க்கும் உண்டு. ஆய்வாளர் நான்காம் வகுப்பென்ற நினைவுடன் உம்முடன் வாது புரிந்தனர். கடிதங் கிடைத்த பின்னரே வகுப்பு நினைவு உண்டாயிற்றென்று தெரிகிறது" என்று தலைமை ஆசிரியர் கூறியதும் "போதும்", என்று கூறி ஆய்வாளரைப் பார்த்து, "மன்னிக்க" என்று சொன்னார் திரு.வி.க.

"யானல்லவோ மன்னிப்புக் கேட்டல் வேண்டும்" என்று ஆய்வாளர் செப்பியதோடன்றி, திரு.வி.க.கடிதம் வரைந்ததையும் பாராட்டினார்.

"யான் மன்னிப்பு வரை செல்பவனல்லன். இனித் தாங்கள் அன்புக்கு எளியன்" என்று புகன்றார் திரு.வி.க.

"இவையெல்லாம் அந்தரங்கம்" என்று சொன்னார் தலைமை ஆசிரியர். அன்பு வென்றது. அதிகாரம் வீழ்ந்தது. ஆண்மை தலை நிமிர்ந்தது. ஆணவம் மண்ணைக் கவ்வியது!!

**- பீமபெருமாள்,**

# 174 பாரம்பரிய நெல் ரகங்களை மீட்டெடுத்தவர்

# நெல் ஜெயராமன்





சைதை மணிமாறன்

கிராமத்து விஞ்ஞானி 'நெல்' ஜெயராமன். இவர், 174 பாரம்பரிய நெல் ரகங்களை மீட்டெடுத்தவர், கிராமத்து விஞ்ஞானி, நெல்லின் காவலன் என்றும் அழைக்கப்பட்டவர் நெல் ஜெயராமன். புற்றுநோயால் பாதிக்கப்பட்டு இருந்த அவர் மரணம் அடைந்தார்.

திருவாரூர் மாவட்டம் திருத்துறைப்பூண்டி அருகே உள்ள கட்டிமேடு ஆதிரெங்கம் கிராமத்தைச் சேர்ந்த ராமசாமிமுத்துலட்சுமி தம்பதியரின் மூன்றாவது மகனாகப் பிறந்தவர் ஜெயராமன். இவர் கட்டிமேட்டில் உள்ள அரசு பள்ளியில் எட்டாம் வகுப்பு வரை மட்டுமே படித்துள்ளார். இவருடைய மனைவி சித்ரா, அங்கன்வாடியில் சத்துணவு அமைப்பாளராக பணியாற்றி வருகிறார். இவர்களது மகன் சீனிவாசராம். இவர், திருத்துறைப்பூண்டியில் உள்ள தனியார் பள்ளியில் ஆறாம் வகுப்பு படித்து வருகிறார். ஜெயராமனின் மூத்த அண்ணன் ஞானசேகரன், அரசுப் போக்குவரத்துக் கழகத்தில் டிக்கெட் பரிசோதகராக பணியாற்றி ஓய்வு பெற்றவர். இரண்டாவது அண்ணன் செல்வராஜ், விவசாயி. மூன்றாவதாக ஜெயராமனும், அவருடைய சகோதரியும் இரட்டையராக பிறந்த வர்கள். சகோதரி, புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி அருகே அவரது கணவர் கணபதியுடன் வசித்து வருகிறார்.

ஆரம்ப காலத்தில் திருத்துறைப்பூண்டியில் உள்ள ஒரு தனியார் அச்சகத்தில் சாதாரண ஊழியராக ஜெயராமன் பணியாற்றி வந்தார். அந்தச் சமயத்தில் நகரில் உள்ள மூத்த மருத்துவர் பாசுமணி என்பவர் நடத்தி வந்த நுகர்வோர் பாதுகாப்புக் குழுவில் செயலாளராக இருந்தார். பின்னர் தனியாக நுகர்வோர் பாதுகாப்பு மையம் என்ற அமைப்பை தொடங்கி நடத்தி வந்தார். இதற்கிடையில் இயற்கை வேளாண் விஞ்ஞானி நம்மாழ்வாரை சந்திக்கும் வாய்ப்பு ஜெயராமனுக்கு கிடைத்தது. அப்போது நம்மாழ் வாருடன், அவர் செல்லும் இடங்களுக்கு எல்லாம் ஜெயராமனும் சென்றார். நம்மாழ்வார் சிஷ்யர் ஆனார். இதனால் தமிழகத்தில் உள்ள விவசாயிகள் எல்லாம் நம்மாழ்வாரை சந்திக்கும்போது, ஜெயராமனையும்

சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்தது.

அப்போது ஒவ்வொரு விவசாயியும், தங்கள் பகுதியில் உள்ள பாரம்பரிய நெல் விதைகளை நம்மாழ்வாரிடம் கொடுத்து இந்த நெல் விதைகளை பாதுகாக்க வேண்டும் என கூறினர்.

அந்த விதைகளை நம்மாழ்வார், ஜெயராமனிடம் கொடுத்து இதை பல மடங்காக பெருக்கும் பொறுப்பை உன்னிடம் விடுகிறேன் என்று கூறினார். 174 வகையான பாரம்பரிய நெல் விதைரகங்களை தான் மீட்டெடுத்ததாகவும் ஜெயராமன் தெரிவித்துள்ளார். குறிப்பாக சொல்ல வேண்டும் என்றால் மரப்பிள்ளை சம்பா, யானைகவுனி, கருப்பு கவுனி, சீரகச் சம்பா, தூயமல்லி, குள்ளக்கார், கிச்சடி சம்பா உள்ளிட்ட ரகங்களாகவும், இந்த காலத்தில் நாம் மருந்து மூலம் பயன்படுத்தும் ஒவ்வொரு விசயங்களுக்கும் அந்தக் காலத்தில் இந்த நெல் ரகங்கள் மூலம் சரிசெய்துள்ளார்கள்.

குறிப்பாக திருமணமான தம்பதியருக்கு இல்லறம் சிறக்க ஒரு நெல் ரகம், கர்ப்ப காலங்களில் குழந்தை வயிற்றில் வளரும்போது அந்தக் குழந்தை நன்றாக வளர அதற்கு ஒரு நெல் ரகம், மீண்டும் பிரசவ காலத்தில் சுகப் பிரசவம் பெறும் உடல்வலிமையை தரக்கூடிய நெல் ரகம். குழந்தை பிறந்த உடன் தாய் பால் சுரப்பதற்கு ஒரு நெல் ரகம், சர்க்கரை நோய், ஆஸ்துமா, சளி, இருமல் உள்ளிட்ட நோய்களைச் சரி செய்ய கூடிய நெல் ரகங்களையும் மீட்டு எடுக்கப்பட்டதாக ஜெயராமன் தெரிவித்தார்.

கடந்த 2006ஆம் ஆண்டு முதல் ஆதிரெங்கம் கிராமத்தில் உள்ள ஒரு பண்ணையில் தேசிய அளவிலான நெல் திருவிழாவை ஜெயராமன் நடத்தி வந்தார். இதில் மூத்த ஐ.ஏ.எஸ். அதிகாரிகள், வேளாண் வல்லுனர்கள், தமிழகம் மட்டுமல்லாது பிற மாநிலங்களில் இருந்தும் விவசாய பிரதிநிதிகள், விவசாயக் கல்லூரி மாணவர்கள் உள்ளிட்ட பல தரப்பினர் கலந்துகொண்டு பாரம்பரிய நெல் விதைகளைப் பற்றி தெரிந்துகொண்டு நெல் விதைகளையும் வாங்கிச் சென்றனர். கிராமத்து விஞ்ஞானியாக நெல் ஜெயராமன் திகழ்ந்தார். பொதுவாக அந்த நெல் திருவிழாவில் ஒரு கிலோ பாரம்பரிய நெல் விதையை வாங்கிச் சென்று அடுத்த ஆண்டு நடைபெறும் விழாவிற்கு வரும்போது இருமடங்காக நெல் விதைகளை வழங்க வேண்டும் என்றும் கூறுவார்கள். அதேபோல விவசாயிகளும், நெல் விதையை வாங்கிச் சென்று இரு மடங்காக வழங்குவார்கள். இந்த நெல் திருவிழா 2018 வரை தொடர்ந்து 12 ஆண்டுகள் நடைபெற்றது.

இந்த நிலையில் அவருடைய அடித்தட்டு மக்களுக்கான கண்டுபிடிப்பான பாரம்பரிய நெல்லை மீட்டெடுத்தற்கான ஜனாதிபதி விருதான 'கிருஷ்டி




சல்மான்' விருது, மறைந்த முன்னாள் ஜனாதிபதி அப்துல்கலாமிடம் பாராட்டுச் சான்றிதழ், தமிழக அரசின் சிறந்த நுகர்வோர் செயல்பாட்டாளர் உள்ளிட்ட பல விருதுகளை மத்திய, மாநில அரசுகளிடம் இருந்து ஜெயராமன் பெற்றுள்ளார். இவர் புதுச்சேரியை தலைமையிடமாகக் கொண்ட 'கிரியேட்' என்ற பாரம்பரிய நெல் விவசாயத்தை பற்றிய பரப்புரை இயக்கத்தில் இணைந்து தமிழகம் மட்டுமல்லாது ஆந்திரா, கர்நாடகா, கேரளா, ஒரிசா உள்ளிட்ட அனைத்து மாநிலங்களுக்கும் சென்று பரப்புரை மேற்கொண்டார்.

தமிழகத்தில் மட்டும் 100க்கும் மேற்பட்ட இயற்கை விவசாயப் பண்ணைகள் அமைத்து ஆயிரத்துக்கும் மேற்பட்ட விவசாயிகளை பாரம்பரிய நெல் விவசாயத்திற்கு மாற்றினார். இந்த நிலையில் கடந்த மூன்று ஆண்டுகளுக்கு முன்பு தோல் புற்றுநோய் தாக்கி சென்னையில் சிகிச்சை பெற்று வந்தார். ஓரளவுக்கு உடல் நலம் தேறிய அவர் மீண்டும் நெல் திருவிழா பணிகளைத் தொடர்ந்தார். இதனால் தனது உடல் நிலையை கவனிக்காமல் நோய் தாக்கம் அதிகமானதால் கடந்த 3 மாதங்களுக்கு முன்பு சென்னை அப்பல்லோ மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தார். அங்கு சிகிச்சை பலனளிக்காமல் ஜெயராமன் மரணம் அடைந்தார்.

நெல் ஆய்வுப் பணிகளில் தீவிரமாக செயல்பட்டதால் இவர் 'நெல் ஜெயராமன்' என எல்லோராலும் அழைக்கப்பட்டார். இனி அவரைப் பார்க்க இயலாவிட்டாலும், அவர் மீட்டெடுத்த நெல்களின் முகங்களில் நெல் ஜெயராமனைப் பார்க்கலாம்.

# வாழ்வே கலை!



மராத்திய எழுத்தாளர் அமரர். வி. ச. காண்டேகர் ஓர் இலட்சியவாதியான சிந்தனையாளர். அவர் ஓர் இடத்தில் இவ்வாறு குறிப்பிடுகிறார். நல்ல உயர்ந்த இலக்கியம் என்பது எழுத்தாளனது ஆன்மாவின் வெளிக்குரல். அந்த ஆன்மா சில சமயம் உலகத்துத் துயரங்களைக் கண்டு இரக்கமுற்றுக் கலங்குகிறது. சில புரட்சிக் கோசத்துடன் போராடுவதற்கு முனைந்து நிற்கிறது. சில சமயம் வாழ்விலுள்ள சிறுமையையும், முள்ளாள்தனத்தையும் கண்டு எள்ளி நகையாடுகிறது, சில சமயம் அதைச் சீர்திருந்துவதற்குப் பாடுபடுகிறது. ஆன்மாவின் இந்த வெளிக்குரல் பலவகையானது. விதம் விதமான அழகிய உருவங்களில் அது வெளி வருகிறது. இந்த ஒவ்வொரு ஆன்மாவும் இலக்கியம் படைப்பதைத் தனது கடமையாகக் கருதுகிறது. பணம் ஈட்டும் தொழிலாக அல்ல!

ஒருவரது கட்டளையினால் எழுதுவது, ஒரு வகையான வார்ப்பில் அமைப்பில் எழுதுவது, மக்கள் வாங்கிப் படிக்கிறார்கள் என்பதற்காக அவர்கள் விரும்புவதை எழுதுவது, சமூகத்திலுள்ள தீமைகளைத் தேர்ந்தெடுத்து, 'இது வாழ்க்கை ஓவியம் என்று கூறிச் சமாதானம் சொல்வது இவையெல்லாமே இந்த ஆன்மா விரும்பாதவை'. இதனால் எழுத்தாளன் நிறைய எழுதக்கூடாது என்று கருத்தல்ல, அவனது எழுத்து, ஆர்வத்துடன் இதய உந்துதலினால் எழுச்சி பெற்று அமைந்ததாக இருக்க வேண்டு மேயல்லாது, வெறும் கூத்தாடும் பொம்மைகளையே அவன் படைத்துக் கொண்டு இருக்கக்கூடாது, தன் படைப்புகளுக்குத் தக்க மதிப்பையோ, வெகுமதி யையோ அவன் பெறக்கூடாத என்பதுமில்லை.

எழுத்தாளன் என்பவன் சமூகத்தை மகிழ்வித்து, அறிவூட்டி உயர்த்துகிற மிகச்சிறந்த நண்பனாவான், இத்தகைய நட்பினை வாழச் செய்வது, சமூகத்தின் கடமையேயாகும். ஆனால், சமூகம் இந்த விசயத்தில், தன் கடமையில் பெரிதும் ஊக்கமுறவில்லை என்ற கசப்பான உண்மையை நினைந்து வருத்தமுறுகிறார், இந்த நிலைமாறுமா? காலம் பதில் சொல்லட்டும்!

*பீமபெருமாள்*

நேர்மையற்ற சமுதாயத்தில் ஒவ்வொரு
பிரச்சினையையும் எதிர்கொள்வதிலேயே
வாழ்க்கையின் பெரும்பகுதி விரயமாகிவிடுகிறது.
**– எஸ். நீலகண்டன்.**

சங்ககாலத்தில் ஏழை, எளியவர்களின் பசியைப் போக்கிய 'பண்ணன்' என்னும் வள்ளலை 'பசிப்பிணி மருத்துவன்' என்றே புறநானூறு போற்றுகின்றது.

அன்பர் பணி செய்ய
என்னை ஆளாக்கி விட்டுவிட்டால்
இன்பநிலைதானே
வந்தெய்தும் பராபரமே!
**– தாயுமானவர்.**

கெஞ்சிவாழ்தல் நஞ்சினுங்கொடிது
கோடி கொடுப்பினும் கொள்கையிற் கோடேல்
**– கவிஞர் வாணிதாசன்.**

என் சிந்தனைகள் வாய்மை நெறிபட்டவை!
அடிப்படைத் தெளிவானவை, உரந்தருபவை!
**–வசுப. மாணிக்கனார் – தமிழறிஞர்.**

ஒன்றை நினைக்கின் அதுவொழிந்திட்டொன்றாகும்
அன்றி அதுவரினும் வந்தேய்தும் – ஒன்றை
நினையாதமுன் வந்து நிற்பினும் நிற்கும்
எனையாளும் ஈசன் செயல்!
**– ஔவை மூதாட்டி.**

தொகுப்பு : பீமபெருமாள்.

## விளம்பர கட்டண விபரம்

**முன்னட்டை உள்ளே ரூ.** 7,000/-
**(முழுப்பக்கம்)**
**பின்னட்டை உள்ளே ரூ.** 7,000/-
**(முழுப்பக்கம்)**
**பின்னட்டை ரூ.** 10,000/-
**(முழுப்பக்கம்)**
**கருப்புவெள்ளை ரூ.** 5,000/-
**(முழுப்பக்கம்)**



29.12.2018 சனிக்கிழமை அன்று எட்டு வழிச்சாலைக்கு எதிரான கூட்டமைப்பை அமைப்பதற்கான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்று ஒருங்கிணைப்புக்குழுவும் ஒருங்கிணைப்பாளர்களும் ஊடகப்பிரிவு, சமூக ஊடகப் பிரிவு, மருத்துவப் பிரிவு, வழக்கறிஞர் பிரிவு, கலை இலக்கியப் பிரிவுகள் போன்ற பிரிவுகளும் அமைக்கப் பட்டன. இதில் அடுத்த கட்ட வேலைத் திட்டங்களாக முதல் கட்டமாக சேலம், தருமபுரி, கிருஷ்ணகிரி, திருவண்ணாமலை, காஞ்சிபுரம் மாவட்டங்களில் கூட்டமைப்புகளைக் கட்டுவது என்றும் பின்பு தமிழகத்தின் முக்கிய மண்டலங்களில் கூட்டமைப்புகளைக் கட்டுவது என்றும் முடிவு செய்யப்பட்டது. கூட்டமைப்பு சார்பாக கருத்தரங்குகள், ஆர்ப்பாட்டங்கள், பல்வேறு போராட்டங்களை நடத்துவது என்றும் முடிவு செய்யப்பட்டது.

**ஏன் எட்டு வழிச்சாலை வேண்டாம்?**

எட்டு வழிச்சாலை என்பது ராணுவத் தளவாடங்களைக் கொண்டு செல்லும் பாதைக்காக உருவாக்கப்பட்ட வழித்தடமே. தமிழகத்தின் முக்கியமான நகரங்களான சென்னை, ஒசூர், சேலம், கோயம்பபுத்தூர், திருச்சி, ஆகிய நகரங்களை இணைக்கும் வகையில் பாரத்மாலா திட்டத்தின் ஒரு பகுதியாக இந்த எட்டு வழிச்சாலை இருக்கும். அதிலும் முதலாளிகளுக்கு லாபம் தரும் நோக்கில் சேலத்தை மையமாகக் கொண்டு இராணுவத் தளவாடப் பொருட்களை கொண்டு செல்ல இந்த எட்டு வழிச்சாலைத் திட்டம் பயன்படுத்தப் படவிருக்கிறது. இந்தச் சாலைகள் காட்டுப்பள்ளி துறைமுகத்தோடு இணைவதற்கான திட்டத்தின் ஒரு வடிவமாகவே இந்த எட்டு வழிச்சாலைத் திட்டம் தெரிகிறது.

சேலைம் மாவட்டத்தில் இருக்கும் கல்வராயன் மலை, சேர்வராயன் மலை, கஞ்ச மலை, ஜகுரு மலை, தருமபுரி மாவட்டத்தில இருக்கும் தீர்த்த மலை, எட்டி பட்டி மலை, போடூராயன் மலை, திருவண்ணாமலை மாவட்டத்தில் இருக்கும் வேடியப்பன் மலை, கவுதி மலை ஆகிய மலைகளிலிருக்கும் கனிம வளங்களான இரும்பு மற்றும் பாக்சைட் தாதுக்களைத் திருடிச் கொண்டு செல்வதற்கான சாலை வசதிகளுக்காகவே இந்த எட்டு வழிச்சாலைத் திட்டம் கொண்டு வரப்படுகிறது.

# எட்டுவழிச்சாலையின் மர்மம்

மக்களுக்காகவே இந்த எட்டு வழிச்சாலை என்று எடப்பாடி அரசு என்னதான் பொய் சொன்னாலும் இந்தத் திட்டம் சம்பந்தப்பட்ட அனைத்துத் தகவல் களும் மருமமாகவே இருக்கின்றன. டீட்டெய்ல்டு புராஜக்ட் ரிப்போர்ட் அறிக்கை தந்திருக்க வேண்டும். அந்த அறிக்கையை இதுவரை தரவில்லை. மேலும் சுற்றுப்புறச் சூழல் பாதிப்பு அறிக்கை தந்திருக்க வேண்டும். அதற்கான கருத்துக் கேட்பு வட்டம், அறிஞர்கள் வருகை எப்போது நடக்கும் என்பதை இதுவரை அரசு சொல்லவில்லை. அப்படியொன்று நடக்குமா என்றும் தெரியவில்லை. அதுபோக சமூக பொருளாதாரப் பாதிப்புகளைக் கணிக்க ஒரு குழு அனுப்பப்பட்டதாக தகவல்கள் வந்தது. அப்படி அனுப்பப்பட்டதா, அப்படி அனுப்பப் பட்டால் அவர்கள் எந்த ரிசர்ச் மெத்டாலஜியை பின்பற்றி னார்கள் / பின்பற்றுவார்கள் என்பது போன்ற தகவல் களைத் தெரிவிக்கவில்லை.

“வணிகரீதியில் அத்தியாவசியமான பொருட்களை, அழுகக்கூடிய பழங்கள், காய்கறிகள், பூ வகைகள் ஆகியவற்றை சென்னை, பெங்களூரு, சேலம் மார்க்க மாக விரைவில் கொண்டு செல்லவும் மாவட்டம் தொழில் ரீதியில் வளர்ச்சியடையவும் கிராம மக்கள், படித்த இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்படவும் பொருளாதார வளர்ச்சி பெறவும் இத்திட்டம் மிகவும் தேவை என்பதாலும் மேலும் இத்திட்டம் மத்திய அரசின் சாலைப் போக்குவரத்து, நெடுஞ்சாலை அமைச்சகத்தின் அனுமதியின்படி செயல்படும் திட்ட மாகும்” என்று அத்துறை சார்ந்த அதிகாரிகள் சொல் கிறார்கள். இதைக் கொண்டு செல்ல ஏற்கனவே இருக்கும் சாலைகளே போதுமானது.

30ஆகஸ்டு 2018 கோம்பூர் அருகிலுள்ள மஞ்சவாடி கணவாயில் (சேர்வராயன் மலையும், கல்வராயன் மலையும் சந்திக்கும் இடம்) பரம்பை32, வேம்பு5, கருவேலம்1, தகரை75, மலைவேம்பு1, வாகை2, வெப்பாலை4, புளியன்1 என்று மொத்தம் 121 மரங்கள் அரசின் ஏற்பாட்டில் திருட்டுத்தனமாக வெட்டப் பட்டன. உயர்நீதிமன்றம், வெட்டப்பட்ட மரங்களுக்கு ஒன்றுக்கு பத்தாக மரக்கன்றுகள் நடவேண்டும் என்று சொல்லியும் மரக்கன்றுகள் நட்டோம் என்று எழுத்துப்பூர்மாக உயர்நீதிமன்றத்தில் சமர்ப்பிக்காமல் ஒப்பேத்துகிறது எடப்பாடி அரசு. வெட்டப்பட்ட மரங்கள் அனைத்தும் எட்டுவழிச் சாலை போகும் இடத்தில் இருப்பது இதில் குறிப்பிடத்தக்கது. மரங்களின் எண்ணிக்கையை குறைத்துக் காட்ட எட்டு வழிச்சாலையின் பேரால் மரங்களை வெட்டுகிறது அரசு. பசுமைவழிச்சாலை அல்ல இது, மாறாக பசு மையை அழிக்கும் சாலையே இது.

இழப்பீட்டுத் தொகை எவ்வளவு என்பதை பற்றியே இந்த அரசுக்கும் அரசு அதிகாரிகளுக்கும் ஒத்த புரிதல் இல்லாத நிலையில் (உதாரணமாக தென்னை ஒன்றிற்கு முதலமைச்சர், ரூ.40000, சேலம் ஆட்சியர் ரூ.50000, திருவண்ணாமலை ஆட்சியர் ரூ.80000, கிருஷ்ணகிரி ஆட்சியர் ரூ.28000) இந்த அரசை விவசாயிகள் எப்படி நம்புவார்கள்? தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின்படி கேட்கப்பட்ட கேள்விக்கு எந்தப் பயிர்களுக்கும் விலை நிர்ணயம் செய்யப்பட வில்லை என்று பதிலளிக்கிறார்கள். இந்தப் பதில் உண்மையா? அல்லது முதலமைச்சர், மாவட்ட ஆட்சி யர்கள் சொல்வது உண்மையா? எது உண்மை?

மக்களின் பேராதரவோடு இந்தத் திட்டம் செயல் படுத்தப்படுவதாக எடப்பாடி அரசு புளுகினாலும் சேலத்தில் விவசாயிகள் எத்தனை பேர் ஆதரவு தெரி விக்கிறார்கள், எத்தனை பேர் எதிர்ப்புத் தெரிவிக்கி றார்கள் என்ற விவரத்தை நாங்கள் இங்கே வெளியிடு கிறோம். இதிலிருந்தே மக்களும் ஊடகங்களும் எத்தனை பேர் இந்த எட்டு வழிச்சாலைக்கு ஆதரவு தெரிவிக்கிறார்கள் என்பதையும் எத்தனைபேர் எதிர்க் கிறார்கள் என்பதையும் தெரிந்து கொள்ளலாம். சேலத் தில் உதாரணமாக மொத்த சர்வே எண்:725=100%, ஆட்சேபனை கொடுத்தது 566=78%, அரசு புறம் போக்கு 114 (15.72)=16%, மனு அளிக்காத சர்வே எண் 45 (6.48)=6%. இதிலிருந்தே நன்றாகத் தெரிந்து கொள்ளலாம் மக்கள் எட்டு வழிச்சாலைக்கு ஆதரவு அளிக்கவில்லை என்பது. அதுபோக இந்த எட்டு வழிச் சாலையில் தலித்துகளுக்கு கொடுக்கப்பட்ட பஞ்சமி நிலங்களையும் புறம்போக்கு நிலங்கள் என்ற பேரில் கையகப்படுத்தி எட்டு வழிச்சாலைக்காக அபகரிக்கிறது இந்த அரசு.

இந்த எட்டு வழிச்சாலை செல்லும் பகுதிகளில் நடந்த மனித உரிமை மீறல்கள் மீதான வழக்குகளின் மீது சிபிசிஐடி விசாரணைக்கு மாண்புமிகு உயர்நீதி மன்றம் ஆணையிட்டது. அடிப்படை உரிமைகள் கூட நீக்கப்பட்ட நிலையில் அந்த ஐந்து மாவட்டங்களில் ஓர் அறிவிக்கப்படாத எமர்ஜென்சி நிலையே நிலவு கிறது. சேலம் சென்னை எட்டு வழிச்சாலையை எதிர்த்து போராடுகிற விவசாயிகளை, இதர சனநாயக இயக்கங்களை கொடூரமாக ஒடுக்கி அடக்கப் பார்க் கிறது தமிழக அரசு.

இந்த ஒடுக்குமுறைக்கு எதிராகவும் எட்டு வழிச் சாலையை தடுத்து நிறுத்துகின்ற வகையிலும் தமிழக அளவில் பரந்த அளவிலான எதிர்ப்புக் கூட்ட மைப்பை அமைப்பதன் மூலம் பாதிக்கப்படும் விவசாயி களுக்கும் பகுதி மக்களுக்கும் தோள்கொடுத்து துணை நிற்க வேண்டியதோடு தமிழக இயற்கை வளங்களைக் காக்க வேண்டிய கடமையும் உரிமையும் இதர மக்கள் இயக்கங்களுக்கும் இயற்கை ஆர்வலர்களுக்கும் இருக்கிறது. அப்படிப்பட்டதொரு அமைப்பே இந்தக் கூட்டமைப்பு.

தொடர்புக்கு: **அரங்க. குணசேகரன்(904752117), அ. மார்க்ஸ் (9444120582), அண்ணாமலை (எ) முகிலன் (8610727882)..**

●



# அகலிகை

**வி**ரும்பிய தேகசுகத்தின்
அரும்பிய ஸ்பரிச உணர்வில்
ஏங்கவைத்த ஆசையின்
அங்கமொழி அசைவில்
தன்னை ரசித்து சுகித்து
உல்லாசம் காணும் சல்லாபன்
மணமுடித்தவன் அல்ல மாற்றானென
மாற்றம் அறியா ரிஷிபத்தினி
அகலிகையென்ன ஜடமா
பொல்லாதவள்!

ஸப்த ரிஷிகளில் மகாரிஷி
முக்காலம் உணர்ந்த ரிஷி
அகலிகை மணாளன் கௌதமுனி
நள்ளிரவு சேவலாய் கூவியவன்
இந்திரனென உணராதது ஏனோ!
ஏமாந்தவன் அவன் தானே
அகலிகை பிரியப்பட்டா அழைத்தாள்
பின்னேனிட்டான் சாபம்
பொல்லாதவன்!

இளந்தேவன்
9345551241.

# தொழிலாளர்கள் உரிமை

**உ**ழைத்துழைத்து அலுத்துவிட்ட உழவர் கூட
ஒருநாளில் விழித்தெழுந்து உரிமை கேட்பார்
பிழைப்பிற்கே இயந்திரத்தில் புரளும் ஏழை
பேசிடுவார் வாய்திறந்து உரிமை பற்றி
மழை இல்லை எனும்போது தவளைகூட
மலை இடுக்கில் இருந்துகொண்டு மறைந்து கத்தும்
உழைக்கின்ற வர்க்கமட்டும் உழைப்பைக் கொட்டி
உரிமைகளைக் கேட்பதனால் தவறென் றாமோ?

எட்டுமணி நேரவேலை முடிக்க எண்ணி
இயந்திரத்தில் வியர்வைகளால் குளித்து விட்டு
கிட்டுகின்ற உணவுகளை வயிற்றில் இட்டு
கிடக்கின்றார் வேதனையில் குடும்பத்தோடு
பட்டமரம் போன்றவாழ்க்கை பசுமை யாக
பங்குகொஞ்சம் கேட்பதனால் குறைந்தா போகும்
துட்டு என்று கேட்டவுடன் முகத்தை மாற்றி
துயருறவே செய்கின்ற நிலையும் ஏனோ?

தொழிலாளர் நலச்சட்டம் இருந்த போதும்
துயர்துடைக்க வருவதில்லை இதுவே உண்மை
தொழிலாளர் போராட்டம் என்றால் மட்டும்
துடித்தெழுந்து நடத்திடுவார் பேச்சு வார்த்தை
தொழிலாளர் உரிமைகளைப் பறிக்க வேண்டித்
துணைபோகும் தொழிற்சங்கச் செயலை நீக்கி
தொழிலாளர் நலச்சட்டம் விளக்கிக் கூறி
துணைநிற்போம் நாமெல்லாம் ஒன்று கூடி!

கவிஞர். இராமன்.



அறியாமை வீழ்வதெப்போ?

தமிழர்களே தமிழர்களைத் தாக்கிக் கொள்ளும்
தலைகுனிவு செயலின்று பரவக் கண்டோம்
தமிழ்ச்சாதி ஒன்றென்றும் உணர்வி ழுந்து
தமிழர்க்குள் இனபேதம் வளரக் கண்டோம்
தமிழ்ப்பகைவர் இதனாலே மகிழ்ச்சி காண
தமிழர்களே துணைபோகும் நிலைமை கண்டோம்
தமிழ்நாட்டின் அமைதிதனைக் குலைப்ப தற்குத்
தமிழ்ப்பகைவர் செய்கின்ற சதிகள் தாமோ?

போராட்டம் செய்வதற்கும் அர்த்த மின்றிப்
போனதடா! நாடுகாக்க, உரிமை காக்கப்
போராட்டம் நடத்துவதில் அர்த்த முண்டு!
பொதுமக்கள் நலன்பாராக் கடைய டைப்பு
போராட்டம் எனும்பெயரால் அரசு டைமைப்
பொருளெல்லாம் எரித்தல்,நா சம்வி ளைத்தல்
போராட்டம் எனச்சொன்னால் நட்டம் யார்க்கு?
பொறுமையுடன் சிந்தித்தால் விளங்கும் உண்மை!

கூலிக்கே கொலை செய்யும் கொடுமை இங்கே
கொடிகட்டிப் பறக்குதடா வெட்கக் கேடு!
வேலிக்கே வெட்கமில்லை, பயிரைக் காக்கும்
வேலியே மேயுதடா என்ன செய்ய?
காலிக்கே கட்சிதன்னில் பதவி தந்தால்
கொள்கையுள்ள தொண்டனுக்கு வேலை என்ன?
போலிக்கே விழாவெடுத்துப் பட்டம் சூட்டிப்
பொய்மைக்கே ஆலவட்டம் எடுத்தல் ஏனோ?

கொடிபிடிக்கும் தொண்டனெல்லாம் வாடுகின்றான்,
கொள்கையில்லாத் தலைவனெல்லாம் வாடுகின்றான்
தடியடியும் துப்பாக்கிச் சூடும் கண்டு
தம்வாழ்வை இழந்தோரின் குடும்ப மெல்லாம்
மிதிபட்டு வாழுதடா நாதி யற்று!
விடியாதோ வாழ்வென்று ஏங்கும் மக்கள்
அடிபட்டுச் சாகின்றார் சாதிப் பேரால்
அறியாமை இந்நாட்டில் வீழ்வ தெப்போ?

பெருங்கவிஞர் நெ. அ. பூபதி.





வள்ளலார் மக்களின் போக்கைக் கண்டு வாடினார்!
சமுதாயத்தின் குறைகளைக்கண்டு சாடினார்!
அவற்றைப் போக்க இறைவன் திருவருளைத்
தேடினார்!
அதற்காக 5818 பாடல்களைப் பாடினார்!
தமது நெறிமுறைகளை மக்கள் ஏற்காததுகண்டு
சித்திவளாகத் தனிஅறைக்குள் சென்று கதவை
மூடினார்!
இறைவனோடு இறைவனாக இரண்டறக் கலந்து
கூடினார்!

உணர்ச்சியும் கிளர்ச்சியும் ஒட்டிப்பிறந்தவை!
எழுச்சியும் புரட்சியும் இரட்டைக் குழந்தைகள்!
கவிதை அதற்குக் கருவே!
புவியோர் அறிந்த போற்றுதல் நலமே!

விருதென்பதுவே பாராட்டு!
வெற்றிக்கதுதான் சீராட்டு!
அரிதென்றுலகில் எதுவுமில்லை!
அயராமுயல்வே அதனெல்லை!

எந்தக்காயத்தையும் ஆத்திடுது காலம்
ஆனால் இழப்பு...? என்பரோ
மீட்க முடியாத மிச்சம்தான்!

வாழுங்காலத்தில் மீட்க முடியாத வடுக்கள்
இழப்புக்கள் மட்டுமே!

–பீமபெருமாள்




# இவர்களும் மாவீரர்கள்தான்

இவர்களுடைய தியாகங்களும் மதிக்கப்படல் வேண்டும்!

தமிழர்களின் விடுதலைக்காகப் போராடி மரணித்தவர்களை மாவீரர்களாகப் போற்றி ஒவ்வொரு ஆண்டும் நினைவு கூர்ந்து வருகிறோம்.

இதில் தமிழ்நாட்டில் இருந்து ஈழத் தமிழர்களுக்கான உயிர் துறந்தவர்களையும் நாம் நினைவு கூரக் கடமைப்பட்டிருக்கிறோம்.

ஈழத் தமிழர்களுக்காக 18 தமிழக தமிழர்கள் தமிழ்நாட்டில் தீக்குளித்து இறந்திருக்கிறார்கள். இது பலரும் அறிந்த செய்திதான்.

ஆனால் தமிழ்நாட்டில் இருந்து வந்து பல இளைஞர்கள் ஈழத்தில் போராடி வீர மரணம் அடைந் திருக்கிறார்கள். இது தமிழ்நாட்டில் மட்டு மல்ல ஈழத்திலே கூட பலர் அறிந்திராத செய்தி.

சாத்தூர் சிவகாசியைச் சேர்ந்த செங்கண்ணன் என்பவர் கரும்புலியாக பலாலி இராணுதளத்தை தாக்கி 11.11.93 அன்று வீர மரணம் அடைந்திருக்கிறார்.

தமிழகத்தில் இருந்து வந்து ஈழத்தில் போராடி வீரமரணம் அடைந்த மேலும் சில மாவீரர்கள் விபரம் வருமாறு,

பிரிவு : கரும்புலி

நிலை : லெப்டினன்ட்

இயக்கப் பெயர் : செங்கண்ணன்

இயற்பெயர் : தனுஷ்கோடி செந்தூர்

ஊர்: சாத்தூர், சிவகாசி (தமிழகம்)

வீரப்பிறப்பு : 25.01.1975

வீரச்சாவு : 11.11.1993

நிகழ்வு யாழ்ப்பாணம் பலாலி படைத்தளத்தினுள் ஊடுருவி மேற்கொள்ளப்பட்ட சிறப்பு நடவடிக்

கையின் போது வீரச்சாவு. துயிலுமில்லம்: உடுத்துறை மாவீரர் துயிலும் இல்லத்தில் இம்மாவீரரின் நினைவுக் கல் நாட்டப்பட்டுள்ளது.

நிலை : மேஜர்

இயக்கப் பெயர் : உமா

இயற்பெயர் : வேலுச்சாமி இந்துமதி

ஊர் : தமிழகம்

வீரப்பிறப்பு : 27.05.1972

வீரச்சாவு : 11.12.1999

நிகழ்வு : கிளிநொச்சி பரந்தன் பகுதியில் "ஓயாத அலைகள் 03" நடவடிக்கையின் போது வீரச்சாவு

துயிலுமில்லம் : விசுவமடு மாவீரர் துயிலும் இல்லத்தில் இம்மாவீரனின் வித்துடன் விதைக்கப் பட்டுள்ளது.

நிலை : வீரவேங்கை

இயக்கப் பெயர் : மணியரசி

இயற்பெயர் : செல்லத்துரை கமலாதேவி

ஊர் : தமிழகம்

வீரப்பிறப்பு : 02.02.1977

வீரச்சாவு : 19.04.1996

நிக்ழவு : யாழ்ப்பாணம் தென்மராட்சி கோட்டத்தை கைப்பற்ற

மேற்கொள்ளப்பட்ட சூரியக் கதிர் 2 நடவடிக்கைக்கு எதிரான சமரில் வீரச்சாவு

துயிலுமில்லம்: ஈச்சங்குளம் மாவீரர் துயிலும் இல்லத்தில் இம்மாவீரனின் நினைவுக்கல் நாட்டப் பட்டுள்ளது.

நிலை : வீரவேங்கை

இயக்கப்பெயர் : பத்மநாபன்

இயற்பெயர் : பி. பத்மநாபன்

ஊர் : திருச்சி, தமிழகம்.

வீரப்பிறப்பு : 27.07.1963

வீரச்சாவு : 16.03.1988

நிகழ்வு : தமிழகத்தின் திருச்சியில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட விபத்தின்போது வீரச்சாவு

நிலை : வீரவேங்கை

இயக்கப்பெயர் : சுனில்

இயற்பெயர் : கதிரவன்

ஊர் : தமிழகம்

வீரச்சாவு : 11.04.1988

நிகழ்வு : முல்லைத்தீவு ஒட்டங்குளத்தில்

இந்தியப்படையினர் மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவு

நிலை : லெப்டினன்ட்

இயக்கப்பெயர் : இனியன் (றஸ்கின்)

இயற்பெயர் : முத்தையா இராமசாமி

ஊர் : தூத்துக்குடி, கன்னியாகுமாரி, தமிழ்நாடு

வீரப்பிறப்பு : 23.07.1962

வீரச்சாவு : 11.12.1991

நிகழ்வு : மன்னர் மருதமடு வேப்பங்குளம் பகுதியில்

சிறிலங்கா படையினருடனான சமரில் வீரச்சாவு

துயிலுமில்லம் : ஆட்காட்டிவெளி மாவீரர் துயிலும் இல்லத்தில் இம்மாவீரனின் வித்துடன் விதைக்கப்பட்டுள்ளது.

நிலை : 2ஆம் லெப்டினன்ட்

இயக்கப் பெயர் : உதயசந்திரன்

இயற்பெயர் : சேதுபாண்டித்தேவர்

ராமமணி சேகரன்மகாதேவர்

ஊர் : திருநெல்வேலி மாவட்டம் தமிழ்நாடு

வீரப்பிறப்பு : 05.05.1969

நிகழ்வு மன்னார் சிறுநாவற்குளத்தில் சிறிலங்காப் படையினர் மீதான அதிரடித் தாக்குதலின் போது வீரச்சாவு

பிரிவு : கடற்புலி

நிலை : கப்டன்

இயக்கப் பெயர் : ஈழவேந்தன்

இயற்பெயர் : துரைராசன் குமரேசன்

ஊர் : தமிழ்நாடு

வீரப்பிறப்பு : 25.05.1969

வீரச்சாவு : 20.11.1992

நிகழ்வு : தமிழீழக் கடற்பரப்பில் வீரச்சாவு

துயிலுமில்லம் : எள்ளங்குளம் மாவீரர் துயிலும் இல்லத்தில் இம்மாவீரரின் நினைவுக்கல் நாட்டப்பட்டுள்ளது.

நிலை : லெப்டினன்ட்

இயக்கப்பெயர் : சச்சு

இயற்பெயர் : அன்ரனி சிறிகாந்த்

வீரப்பிறப்பு : 04.09.1975

வீரச்சாவு : 20.12.1992

நிகழ்வு : மன்னார் நானாட்டன் மாதிரிக்கிராமம்

படை முகாம்களுக்கிடையில் அமைந்துள்ள காவலரண்கள்

மீதான தாக்குதலின்போது வீரச்சாவு

துயிலுமில்லம் : பண்டிவிரிச்சான் மாவீரர் துயிலும் இல்லத்தில் இம்மாவீரரின் வித்துடன்

விதைக்கப்பட்டுள்ளது.

நிலை : கப்டன்

இயக்கப் பெயர் : குணதேவன் (லக்ஸ்மணன்)

இயற்பெயர் : அம்மனாரி தென்னரசு

ஊர் : தமிழகம்

வீரப்பிறப்பு : 01.01.1966

வீரச்சாவு : 13.05.1996

நிகழ்வு : அம்பாறை 11ஆம் கொலனியில் அமைந்திருந்த காவல்துறை நிலையம் மீதான தாக்குதலின்போது வீரச்சாவு

நிலை : கப்டன்

இயக்கப் பெயர் : பெரியதம் (விஸ்ணு)

இயற்பெயர் : சிவானந்தம் முகேஸ்

ஊர் : தமிழகம்

வீரப்பிறப்பு : 31.05.1975

வீரச்சாவு : 19.05.1996

நிகழ்வு : திருகோணமலை கீலக்கடவெல படைமுகாம் மீதான தாக்குதலில் வீரச்சாவு

துயிலுமில்லம் : மாவீரர் துயிலும் இல்லத்தில் இம்மாவீரரின் வித்துடன் விதைக்கப்பட்டுள்ளது.

நிலை : கப்டன்

இயக்கப் பெயர் : குற்றாளன்

இயற்பெயர் : கந்தையா கலைச்செல்வன்

ஊர் : தமிழகம்

வீரப்பிறப்பு : 08.08.1969

வீரச்சாவு : 16.07.1996

நிகழ்வு : மன்னார் பள்ளிமுனைப்பகுதியில்

படையினரின் சுற்றிவளைப்பின் போது சரனைட் உட்கொண்டு வீரச்சாவு

நிலை : வீரவேங்கை

இயக்கப் பெயர் : சுதா

இயற்பெயர் : வீரப்பன் இலட்சுமணன்

ஊர் : தஞ்சாவூர், தமிழ்நாடு

வீரப்பிறப்பு : 28.10.1980

வீரச்சாவு : 05.07.1999

நிகழ்வு : மன்னார் பன்னமடு பகுதியில்

சிறிலங்கா படையினருடன் ஏற்பட்ட நேரடிமோதலில் வீரச்சாவு

துயிலுமில்லம்: கனகபுரம் மாவீரர் துயிலும் இல்லத்தில் இம்மாவீரனின் வித்துடன் விதைக்கப்பட்டுள்ளது.

நிலை : மேஜர்

இயக்கப் பெயர் : குருசங்கர்

இயற்பெயர் : பழனியாண்டி மகேந்திரன்

ஊர் : தமிழகம்

வீரப்பிறப்பு : 18.04.1973

வீரச்சாவு : 25.07.1996

நிகழ்வு : முல்லைத்தீவு படைத்தளம் மீதான ஓயாத அலைகள் நடவடிக்கையின்போது விழுப்புண்ணடைந்து பண்டுவம் பெறும்போது வீரச்சாவு

துயிலுமில்லம் : பண்டிவிரிச்சான் மாவீரர் துயிலும் இல்லத்தில் இம்மாவீரனின் வித்துடன் விதைக்கப்பட்டுள்ளது.

எத்தனைபேர் தமிழ்நாட்டில் இருந்து வந்து போராடினார்கள்? அதில் எத்தனை பேர் வீர மரணம் அடைந்தார்கள்? என்ற முழு விபரம் கிடைக்கவில்லை.

வேண்டுகோள்:

தமிழ்நாட்டில் இருந்துவந்து ஈழத்தில் போராடி மரணித்தவர்களின் முழு விபரம் தமிழ் மக்களுக்கு தெரியப்படுத்தல் வேண்டும்.

தமிழுக்காகப் போராடி வீரமரணம் அடைந்த தமிழக இளைஞர்களை ஈழத் தமிழர்கள் ஆண்டுதோறும் சிறப்பாக நினைவு கூரவேண்டும்.

மாவீரர் நினைவு நிகழ்வுகளை நடத்துவோர் தமிழ்நாட்டு மாவீரர்களையும் இனி குறிப்பிட்டு மதிப்பளிக்க வேண்டும்.

**இலண்டனிலிருக்கும் தோழர் பாலனின் பதிவு.**

வீட்டுக்கு மூன்று காரு தேவையா
பொருளாதாரம் வீழ்ந்து கிடப்பதைப் பாரய்யா
நீயும் நானும் அண்ணன் தம்பிதானய்யா
நமக்குள்ளே உயர்வு தாழ்வு ஏனய்யா
அயல் நாட்டான் ஆப்பு வைக்கிறான்
வல்லரசு ஆவதை தடுக்கப் பார்க்கிறான்
புரியாமல் ஏன் பேதம் பார்க்கிறோம்
சாதி மத காரணத்தால் தள்ளி நிற்கிறோம்
சைனாக்காரன் பொருட்களை எல்லாம்
வாங்கிக் குவிக்கிறோம் அதனாலே
நம்ம பணம் கொள்ளை போகுதே
பல வண்ணங்களில் ஜொலிக்குது சைனாபீசு
அந்தக் கவர்ச்சியில் நாமும் மயங்கிப் போகிறோம்
அயல் நாட்டுப் பொருளுக்கு ஏங்கி
உழைப்பெல்லாம் வீணாய்ப் போகுதே
நம்ம நாட்டு பொருளென்றால் இளக்காரமா
நம்மை நாமே தாழ்த்துவது சரியாகுமா
ஓடி ஓடி உழைக்கிறோம் அயல்நாட்டுக்கு
நம்ம நாட்டுப் பற்று எங்கே போச்சு
ஆக மொத்தம் நம்ம இந்தியா
பொருளாதாரத்தில் வீழ்ச்சியாச்சு!

வாணியம்பாடி தியாகராஜன்,
9962082032.



# புற்றுநோய்க்கு புதிய மருந்து

சீனாவில் பெய்ஜிங் நகரில் உள்ள இராணுவ பொது மருத்துவப் பிரிவில் உள்ள மருத்துவ பேராசிரியர் சென் ஷூய் ரென் கேன்சருக்கான புதிய இயற்கை மருந்தினை கண்டறிந்து அதனை உறுதிப்படுத்தியுள்ளார். மேற்படி விவரத்தினை ஒவ்வொருவரும் குறைந்தது 10 நபருக்கேனும் அனுப்பினால் மிக வேகமாக பாதிப்பிற்கு உள்ளாகி இருக்கும் நபர்களுக்கு உதவியாக இருக்கும்.

பாகற்காயை சுடுதண்ணீரில் போட்டுக் குடிக்க அது நமக்கு உதவி செய்யும். சூடான பாகற்காய் சுடுநீர் கேன்சரை உருவாக்கும் செல்களை கொல்லும் சக்தியை கொண்டது.

பாகற்காயினை எடுத்து 23 மெல்லிய துண்டுகளாக நறுக்கி ஒரு டம்ளரில் போட்டு அதில் சூடான நீரை ஊற்ற வேண்டும். அந்த சூடான நீர் அல்கலைன் எனப்படும் காரத்தன்மை கொண்ட நீராக மாறிவிடும். அந்தத் தண்ணீரை தினமும் குடிக்க வேண்டும். நோயினால் பாதிக்கப்பட்டவருக்கு மிக மிக உதவியுள்ளதாக இருக்கும்.

பாகற்காயில் உள்ள கேன்சர் நோயினை எதிர்க்கும் மருத்துவப் பொருளினை சுடுதண்ணீரில் வெளியேற்றி விடும். இயற்கை மருத்துவத்துறையில் இது மிக முக்கியமான முன்னேற்றமாக உலகம் முழுவதும் பார்க்கப்படுகிறது. மேலும் புற்றுநோய்க்கு சிகிச்சை அளிப்பதில் மிகவும் பயனுள்ளதாக கருதப்படுகிறது.

இந்த பாகற்காய் இரசமானது கட்டிகள் மற்றும் புற்றுநோய் கட்டிகள் மீது தீவிரமாக செயல்படுகிறது என்பது ஏற்கனவே நிரூபனமாகியுள்ளது. மேலும் இது பல்வேறு வகையான புற்றுநோய்களையும் தீர்க்க உதவுகிறது.

நாம் இந்த பாகற்காய் இரசத்தினை தொடர்ந்து பயன்படுத்தும் அது புற்றுநோய் கட்டியில் தீவிரமாக பரவக்கூடிய செல்கள் மீது அதிதீவிரமாக செயல்பட்டு மலிக்னன்ட் எனப்படும் வேகமாக பரவும் புற்றுநோய் செல்களை அழிக்கிறது. தவிர பாதிக்கப்படாத மற்ற செல்களுக்கு எவ்வித பாதிப்பினையும் ஏற்படுத்துவதில்லை.

இது மட்டுமல்லாமல் பாகற்காயில் உள்ள அமினோ அமிலங்கள் மற்றும் பாலிஃபினல் ஆக்சைடுகள் நமது உடலில் ஏற்படும் உயர் இரத்த அழுத்தத்தினை சமன் செய்கிறது. இரத்த நாளங்களில் சீரான இரத்த ஓட்டத்தினையும், நாளத்தில் உள்ள இரத்த அடைப்புகளையும் சீர்செய்கிறது. •

# வெள்ளரிக்காய் சாப்பிடுவதால் என்னென்ன நன்மைகள் உண்டு தெரியுமா...!

வெள்ளரிக்காயில் நீர் அதிகமாகவும், கலோரி குறைவாகவும் இருப்பதால், உடல் எடையைக் குறைக்க விரும்புவர்களுக்கு இது சரியானஉணவாகஅமையும். தினமும் வெள்ளரிக்காயை உட்கொண்டால் தீவிரமானமலச்சிக்கலை நீக்கும்.

வெள்ளரிக்காயில் இன்சுலின் சுரப்பதற்கு, கணையத்தில் உள்ள அணுக்களுக்கு தேவையான ஹார்மோன் ஒன்று வெள்ளரிக்காய்ச் சாற்றில் உள்ளது.

அதனால் இது சர்க்கரை நோயாளிகளுக்கு பெரிதும் உதவுகிறது.

வெள்ளரிக்காயில் உள்ள ஸ்டேரோல் என்ற பொருள் உடலில் உள்ள கெட்ட கொழுப்புகளை குறையச் செய்யும். மேலும், அதிலுள்ள நார்ச்சத்து, பொட்டாசியம் மற்றும் மெக்னீசியம் இரத்தக்கொதிப்பை கட்டுப்பாட்டில் வைக்க உதவும்.

வெள்ளரிக்காய்ச் சாறுஈறுகளில் இருக்கும் நோய்களை குணப்படுத்தும். மேலும் வாயில் துர்நாற்றத்தை ஏற்படுத்தும் பாக்டீரியாவை அழித்துவிடும்.

சிலிகா என்ற அற்புதமான கனிமம் வெள்ளரிக்காயில் உள்ளதால், அவை, நகங்கள்மற்றும் முடியை பளபளப்பாகவும் திடமாகவும் வைத்திருக்கும். மேலும் அதிலுள்ள சல்பரும், சிலிகாவும் முடியின் வளர்ச்சிக்கு தூண்டுகோலாக இருக்கும். மேலும் தசை இணைப்புகளை திடமாக்கி மூட்டு ஆரோக்கியத்துக்கு துணையாக நிற்கும்.

வெள்ளரிக்காயை கேரட் ஜூஸ்உடன் சேர்த்து பருகும் போது, உடலில் யூரிக் அமிலத்தின் அளவு குறைவதால் கீழ்வாதத்திற்கும் நிவாரணம் கிடைக்கும்.

உடலில் உள்ள யூரிக் அமிலத்தின் அளவை குறைக்க வெள்ளரிக்காய் உதவுவதால், அவை சிறுநீரகத்தை ஆரோக்கியமாக வைத்திருக்கும்.

– சாதிக்





# திருவாரூக்கு மட்டும் ஏன் இடைத்தேர்தல்?

## திராவிடர் கழகத் தலைவர் கி. வீரமணி அறிக்கை

*தமிழ்நாடு சட்டப்பேரவையில் இருபது இடங்கள் காலியாக இருக்கும்போது திருவாரூருக்கு மட்டும் அவசரமாக இடைத்தேர்தல் நடத்துவது ஏன்? இருபது தொகுதி இடைத்தேர்தல், ஆட்சிக்கு எடைத் தேர்தலாக மாறும் என்பதாலா?*

*'கிடப்பது கிடக்கட்டும் கிழவியைத் தூக்கி மனையில் வை' என்று கிராமத்தில் ஒரு பழமொழி சொல்வார்கள். அதுபோல, இருபது சட்டமன்ற உறுப்பினர்கள் பதவிகள் காலியாக உள்ளன என்று தமிழ்நாடு சட்டமன்ற சபாநாயகர் தேர்தல் ஆணையத்துக்கு எழுதி சில மாதங்கள் பல வாரங்கள் ஆகிவிட்டன.*

*பாதிக்கப்பட்டவர்களில் எவரும் அந்த உயர்நீதிமன்ற நீதிபதி (ஜஸ்டிஸ் சத்திய நாராயணா) தீர்ப்பை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் மேல் முறையீடு (அப்பீல்) ஏதும் செய்யவுமில்லை. இந்நிலையில் அவைகளுக்குத் தேர்தல் நடத்தாமல் திருவாரூருக்கு மட்டும் 2018ஆகஸ்ட், கலைஞர் மறைவால் ஏற்பட்ட காலியிடத்தை நிரப்புவதில் மட்டும் தனித்த அக்கறை காட்டுவதன் நோக்கம் தான் என்ன?*

*பின்னது கிடக்கட்டும் முன்னது க்யூவை உடைத்து சில குண்டர்கள் முன்னே வந்து நிற்கும் காட்சிபோல, திருவாரூர் இடைத்தேர்தல் 2019 ஜனவரி 28ஆம் நாள் நடைபெறும் என்று டிசம்பர் 31 மாலை அறிவிப்பு. சட்டப்படி, நியாயப்படி, ஜனநாயகப்படி முப்பது நாள் அவகாசம் பற்றியெல்லாம் கவலைப்படாது திடீர் அறிவிப்பின் 'ரகசியம்' தான் என்னவோ? திருப்பரங்குன்றத்திற்கு நீதிமன்றத்தில் வழக்கு இருக்கின்றது என்ற சாக்கு 'ரெடிமேட்' ஆயுதமும் கையில் இருக்கலாம்.*

*'மழை பெய்யும் ஆகவே தள்ளி வையுங்கள்' என்று தமிழக அரசு முன்பே தலைமைச் செயலாளர் தேர்தல் ஆணையத்துக்கு எழுதியது போல இப்போது ஏதாவது கடித வேண்டுகோள் போயிருக்கிறதா? மழை புயல் முடிந்து விட்டது உடனே வையுங்கள் என்று கடிதம் ஏதாவது போனதா?*

ரசியப் புரட்சியின் சிற்பி டிராட்ஸ்கி குறித்த வைகோ சில கருத்துகளை பகிர்ந்துள்ளார். அவை உங்கள் பார்வைக்கு...

இந்த நாட்களில்தான் மனிதகுல வரலாற்றில் மறக்க முடியாத மனிதராக நான் கருதுகிற லியான் டிராட்ஸ்கியின் சுயசரிதையான 'என் வாழ்க்கை' எனும் அற்புதமான நூலைத் திரும்பவும் படித்துக் கொண்டு இருந்தேன். முப்பது ஆண்டுகளாக என் இல்ல நூலகத்தை அழகு செய்யும் அற்புதமான உன்னதமான நூல் இது.

'மாகாளி கடைக்கண் வைத்தாள்... ஆகா என்று எழுந்தது யுகப் புரட்சி' என எரிமலைக்கவிஞன் பாரதி பாடிய சோவித் ரசியப் புரட்சியை முன்னின்று நடத்தியவர்கள் இருவர். ஒருவர் மாமேதை லெனின், இன்னொருவர் புரட்சியின் கதாநாயகன் லியான் டிராட்ஸ்கி.

கொள்கைப் புரட்டர்களாலும் எதிர்ப் புரட்சியாளர்களாலும் புரட்சியின் அறுவடையை அனுபவித்த பின், உண்மைப் போராளிகளுக்குத் துரோகம் செய்து, தலைமைப் பதவியைக் கைப்பற்றிக் கொண்டவர்களாலும் விவரிக்க இயலாத துன்பங்களையும் வேதனைகளையும் தாங்கியவர் டிராட்ஸ்கி.

பல ஆண்டுகளாக டிராட்ஸ்கியிசம் என்றாரே 'திரிபுவாதம்' என்றும், டிராட்ஸ்கியிசம் என்றாலே 'துரோகத்தனம்' என்றும் கம்யூனிசுடுகள் விமர்சித்து வந்தார்கள்.

மாமேதை லெனினின் இறுதி நாள்களில், அவரது மனதில் ஆறாத இரணத்தை ஏற்படுத்தியவர் ஜோசப் ஸ்டாலின். இதை லெனின் துணைவியாரான 'குருப்கயா' ஆதாரத்தோடு குறிப்பிட்டு இருக்கிறார்.

யூத குலத்திலே பிறந்த லியான் டிராட்ஸ்கி எழுதிய 'என் வாழ்க்கை' என்ற நூலில் இருந்து, அரசியலை போராட்டக் களமாக்கிக் கொண்டவர்கள் பல படிப்பினைகளைத் தெரிந்து கொள்ளலாம்.

# துரோகங்களால் வீழ்ந்த டிராட்ஸ்கி
## வைகோவின் அழகான சொற்சித்திரம்



**‘மாகாளி கடைக்கண் வைத்தாள்... ஆகா என்று எழுந்தது யுகப் புரட்சி’ என எரிமலைக்கவிஞன் பாரதி பாடிய சோவித் ரசியப் புரட்சியை முன்னின்று நடத்தியவர்கள் இருவர். ஒருவர் மாமேதை லெனின், இன்னொருவர் புரட்சியின் கதாநாயகன் லியான் ட்ராட்ஸ்கி.**

முப்பது நூல்களுக்கு மேல் எழுதிய வித்தகரான டிராட்ஸ்கி இணையற்ற எழுத்தாளர். புரட்சியின் படைக்கலன்களான ஏடுகள் பலவற்றின் ஆசிரியராகத் திகழ்ந்தவர்.

அகிலத்தின் ‘நிரந்தரப் புரட்சி’ என்ற சித்தாந் தத்தை உருவாக்கி ஆயுதப் புரட்சியில் களத்தில் நின்று ஆயுதம் ஏந்திப் போராடியவர்.

உலகமே திகைக்கும் விதத்தில் 1917க்குப் பின் பிரமிக்கத்தக்க இராணுவத்தை ரசியாவில் ஒரே ஆண்டில் கட்டி எழுப்பிய இராணுவ மேதை.

எதிரிநாடுகளின் படையெடுப்பை முறியடித்து உள்நாட்டுப் போரில் போல்ஷ்விக்குகளுக்கு வெற்றி தந்தவர். நிகரற்ற சொல்வன்மை மிக்க மேடைப் பேச்சாளர். ‘ஸ்டாலினிசம்’ என்ற எதேச்சதிகாரத் தன்மையை, கொள்கையற்ற பொய்மையை உலகத்திற்கு அம்பலப்படுத்தியவர்.

மாமேதை லெனின் திடீரெனப் பக்கவாதத்தால் நடமாடும் சக்தியையும் பேசும் திறனையும் இழந்த துயரத்தை, டிராட்ஸ்கியின் காதுகளுக்கு மூன்று நாட்கள் வரை சேரவிடாமல் தடுத்தனர். லெனின் உடல் நலம் ஓரளவிற்குத் தேறி, பேசவும் நடக்கவும் மீண்டும் திறன் பெற்றதற்குப் பின்னரும் திரை மறைவுத் துரோகச் செயல்கள் தொடர்ந்தன.

லெனின் உயிர்நீத்த நாளில் ரஷ்ய நாட்டின் வேறொரு பகுதியில் இருந்த டிராட்ஸ்கியிடம் ‘உடனடியாக லெனின் அடக்கம் செய்யப்பட்டு விடுவார் என்றும் அவரது ஈமச் சடங்குகளுக்கு முன்னர் வர டிராட்ஸ்கிக்கு வாய்ப்பு இல்லை’ என்றும் தகவல் தரப்பட்டது.

ஆனால், மூன்று நாட்களுக்குப் பின்னர்தான் உடல் நல்லடக்கம் செய்யப்பட்டு, பதனப்படுத்தப்பட்ட பெட்டியில் சடலம் வைக்கப்பட்டது. உண்மைகளை உரக்கப் பேசியதால் டிராட்ஸ்கி நாடு கடத்தப்பட்டார். அவரும் அவரது மனைவியும் மகளும் யாருக்கும் தெரியாமல் கைது செய்யப்பட்ட, பனிப் பிரதேசங்கள் வழியாக வெளியேற்றப்பட்ட கொடுமை சொல்லும் தரமன்று.

இக்காலத்தில்தான், டிராட்ஸ்கியின் இளைய மகள் நீனா நோய்வாய்ப்பட்டு இறந்தார். தந்தையிடம் இருந்து பதில் கடிதம் வரும் என மரணப் படுக்கையில் ஏங்கியவாறு உயிர் நீத்த நீனா, தந்தைக்கு எழுதிய கடைசிக் கடிதத்தை டிராட்ஸ்கியிடம் கொடுக்காமலே மறைத்தனர். அவள் இறந்தபிறகே கொடுத்தனர். மரணப்படுக்கையில் இருந்து அவளைப் பார்க்கவும் டிராட்ஸ்கி அனுமதிக்கவில்லை.

1928 சனவரி 20ஆம் நாள், சீனாவை ஒட்டிய ரசிய எல்லைப் பகுதியில் ஒரு பாழடைந்த ‘அல்மா கட்டா’ என்ற சிறிய நகரத்திற்குக் கொண்டு செல்லப்பட்ட டிராட்ஸ்கி, அங்கே சிறையில் வைக்கப்பட்டது போல முடக்கப்பட்டார்.

1929 சனவரி 20இல் சோவியத் நாட்டில் இருந்தே டிராட்ஸ்கியை நாடு கடத்தும் உத்தரவு பிறப்பிக்கப் பட்டது. துருக்கி நாட்டின் கான்ஸ்டாண்டி நோபிளுக்குக் கொண்டு செல்லப்பட்டார்.

1929 ஜூன் மாதத்தில் பிரிட்டனில் குடியேற விரும்பி விசா கோரி விண்ணப்பித்தார். பிரட்டீஷ் பிரதமர் மெக்னால்டுக்கும் தந்தி அனுப்பினார். ஆனால், தொழிற் கட்சி அரசு டிராட்ஸ்கியின் வருகையை விரும்பவில்லை.

ஜார்ஜ் பெர்னாட்ஷா, ஹெச்.ஜி.வெல்ஸ், பேராசிரியர் ஹெரால்டுலாஸ்கி, பர்மிங்ஹம் மேற்றி ராணியார் ஆகியோர், அரசாங்கத்தைக் கண்டித்தும், டிராட்ஸ்கிக்கு அனுமதி தரக் கோரியும் அறிக்கை விட்டனர்.

பெர்னாட்சா தனது கடிதத்தில் குறிப்பிட்டதாவது:

‘மிகமிகப் பிற்போக்கான எதிரிகளுக்குக்கூட பிரிட்டன் புகலிடம் அளிக்கும்போது, உலகப் புகழ்பெற்ற ஒரு தலை சிறந்த சோசலிசுடுக்குப் புகலிடம் அளிக்க மறுப்பது ஓர் இக்கட்டான நிலையை உருவாக்கியுள்ளது. இந்த அரசாங்கத்தின் மறுப்பால் டிராட்ஸ்கியின் வாயை மூட முடியாது. அவர் உலக நாடுகளின் தீவிரவாதிகள் அனைவரும் போற்றிப் புகழும் மாவீரர். அவர்களுக்கு உணர்ச்சி ஊட்டுகிறவர். உந்து சக்தியாக விளங்குகிறவர். கூண்டில் அடைத்த சிங்கத்தைக் கண்டு பயப்படுகிறவர்கள், அந்தக் கூண்டின் சாவி தங்கள் கையில் இருக்க வேண்டும் என்று விரும்பினால் டிராட்ஸ்கியைப் பிரிட்டனுக்கு வர அனுமதிக்க வேண்டும்“ என்றார்.

ஏனைய ஐரோப்பிய நாடுகளும் இக்கூண்டுச் சிங்கத்திற்கு விசா வழங்க மறுத்தன. ஜெர்மனிக்குச் செல்ல விரும்பிய டிராட்ஸ்கியை ஹிட்லர் வசை பாடினார்.

*ஹிட்லரின் பத்திரிக்கையான 'பெயோபச்சட்டர்' 1929 பிப்ரவரி 9 இல் எழுதியதாவது, "சோவியத் யூத வேட்டை நாயான டிராட்ஸ்கி பெர்லினில் குடியேற விரும்புகிறான். இந்த யூதக் கொலைகாரன் மீது நாம் ஒரு கண் வைத்து இருப்போம்" என்று எழுதியது.*

*'ஜெர்மனியில் நாஜிகள் செல்வாக்குப் பெறுவது சோசலிசத்திற்குப் பேராபத்தாக முடியும்' என்று ஹிட்லரைக் குறித்து தொடக்கத்திலேயே எச்சரிக்கை தந்தார் டிராட்ஸ்கி.*

*1932 பிப்ரவரி 20ஆம் நாள், சோவியத் ரசியாவின் அறிவிக்கப்படாத சர்வாதிகாரி ஸ்டாலின், டிராட்ஸ்கியின் குடி உரிமையைப் பறித்தார்.*

*டென்மார்க்கின் முற்போக்குவாதிகள் டிராட்ஸ் கியை அழைத்தனர். ஆனால், டென்மார்க் அரசு அனுமதிக்கவில்லை. சுவீடனும் மறுத்தது. பின்னர் பிரான்ஸ் நாட்டில் பாரஸ் பட்டணத்தை அடுத்த பார்பிசன் என்ற சிறிய நகரில் குடியேறினார்.*

*பின்னர் பிரான்சில் இருந்தும் நாடு கடத்தப் பட்டார். நார்வே நாட்டுக்குச் சென்றார். ஸ்டாலினின் ஆதிக்கக் கரங்கள் நார்வேயில் இருந்தும் டிராட்ஸ்கியை விரட்டியது. அங்கிருந்து அட்லாண் டிக் கடல் தாண்டி மெக்சிகோ போய்ச் சேர்ந்தார் டிராட்ஸ்கி.*

*டிராட்ஸ்கி தனது மரண சாசனத்தை 1940 பிப்ரவரி 27 இல் எழுதினார். அதே ஆண்டு ஆகஸ்ட் 21ஆம் தேதி அவர் படுகொலை செய்யப்பட்டார்.*

*நயவஞ்சமாகத் திட்டமிட்டு நண்பனைப் போலவே நடித்த அக்கொலைகாரன் தந்த கட்டுரையைச் சரிபார்த்துக் கொண்டு இருக்கும்போதே, கோடாலியில் டிராட்ஸ்கியின் தலையைப் பிளந்தான் கொலைகாரன் ஐக்சன்.*

*தலை வெட்டுண்ட நிலையிலும் கொலைகாரன் மீது பாய்ந்து டிராட்ஸ்கி போராடினார். உயிர் பிரியும் தறுவாயில், வாய் குழற அவர் கூறியது.*

*"ஒரு கொலைகாரனின் தாக்குதலால் நான் மரணத்தை நெருங்கிக் கொண்டு இருக்கிறேன். எனது அறையில் என்னைத் தாக்கினான். நான் அவனுடன் போராடினேன். தயவு செய்து நமது நண்பர்களிடம் சொல்லுங்கள். நான்காவது அகிலத்தின் வெற்றி நிச்சயம். முன்னோக்கிச் செல்லுங்கள்.*

*தொடர்ந்து பேச முயன்றார் முடியவில்லை. காலம் மாறியது. 1988 நவம்பர் ஏழாம் தேதி மாஸ்கோவில் டிராட்ஸ்கியின் பிறந்த நாள் கொண்டாடப்பட்டது.*

*என் நெஞ்சில் அதிர்வு அலைகளை ஏற்படுத்திய ஒரு மாவீரனின் மறைக்கப்பட்ட வரலாறை நான் உள்வாங்கிக் கொண்டதால் இதை எழுதி இருக் கிறேன்.*

●

## செல்ஃபோன் கதிர்வீச்சின் அபாயம்

செல்ஃபோன் கம்பெனிகள் தங்களுக்கு வழங்கப்பட்டி ருக்கும் அலைக்கற்றையை (Frequency band / Spectrum) அதிகரிக்க முடியாது. ஆனால் Radiating Power ஐ அதிகரிக்க முடியும்.

ஒரு செல்ஃபோன் டவரில் (BTS) இருந்து வரும் Radiating Power Standard உலக அளவில் 12 வாட்ஸ். இந்திய அளவில் 15 முதல் 18 வாட்ஸ். இந்த அளவில் இருந்தால் பறவைக ளுக்கோ, மனிதர்களுக்கோ எந்தப் பாதிப்பும் இல்லை.

சில தனியார் நிறுவனங்கள் 60 வாட்ஸ் வரை வைத்திருப்ப தாகக் கேள்வி. (TRAI விதிமுறைப்படி இதற்கு அனுமதி யில்லை என்றாலும், நம் நாட்டில் விதிமுறைகள் எவ்வாறு கடை பிடிக்கப்படுகின்றன என்று தெரிந்தது தான்)

இதனால் பறவைகளுக்கு மட்டுமல்ல, மனிதனின் காது, மூளை ஆகியவையும் பாதிப்படையும். இது நீண்ட கால அடிப் படையிலானது என்பதால் இன்னும் முழுதாக நிரூபிக்கப் படவில்லை.

பி.எஸ்.என்.எல். நினைத்தாலும் இப்படி தனியார் போல வேண்டுமென்ற Power Radiation ஐ அதிகப்படுத்திக் கொள்ள முடியாது. காரணம், அரசு நிறுவனம் சட்டத்திற்குப் புறம்பான விசயங்களைச் செய்ய முடியாது.

அதனால்தான் தனியார் செல்ஃபோன் சிக்னல், கண்ணாடி அறை, அண்டர்கிரவுண்ட் குடோன் என்று நீக்கமற எங்கும் துல்லியமாகக் கிடைக்கிறது. ஆனால் பி.எஸ்.என்.எல். அழைப்பு வந்தால், செல்லை எடுத்துக் கொண்டு வராண்டாவிற்கு ஓட வேண்டி இருக்கிறது.

இதைத்தான் இத்தனை நாள், சிக்னல் எல்லா இடங்களிலும் கிளியரா கிடைக்கும். பி.எஸ்.என்.எல். வேஸ்ட் என்று நாம் பெருமையாகப் பேசிக் கொண்டிருந்தோம். மற்ற நாடுகளில் இதை எப்படி சமாளிக்கிறார்கள் என்றால், செல்ஃபோன் என்பது வெளியிடங்களில் பயன்படுத்துவதற்கு மட்டுமே. வீட்டுக்கு வந்துவிட்டால் லேண்ட்லைன்தான் என்ற புரிதல் அவர்களிடம் இருக்கிறது.

லேண்ட்லைனில், தரைவழி கம்பி வழியாக இணைப்புக் கொடுப்பதால் Radiation என்ற பேச்சுக்கே இடம் இதில் கிடையாது.

என் செல்ஃபோனுக்குத்தான் அழைப்பு வரும். ஒவ்வொரு முறையும் லேண்ட்லைனுக்கு மாற்றி அழைக்கச் சொல்ல முடியாது என்றால், நீங்கள் வீட்டில் இருக்கும்போது, உங்கள் செல்லுக்கு வரும் அழைப்புகளை லேண்ட்லைனிற்கு 'கால் டைவர்ட்' செய்து கொள்ளலாம்.

செல்ஃபோன் Radiation க்குத் தீர்வு, தொலைத்தொடர்பு சேவை வழங்கும் நிறுவனங்களின் எண்ணிக்கையைக் குறைப்ப தல்ல. Radiation Power ஐ நிர்ணயிக்கப்பட்ட அளவிற்குள் வைக்க வலியுறுத்துவதே. இதை பொதுமக்கள் நேரடியாகப் பார்த்து உணர முடியாது என்பதால் கயவர்களுக்கு வசதியாகி விடுகிறது.

செல்ஃபோனைப் பயன்படுத்தாதீர்கள் என்று பயமுறுத்த மாட்டேன். ஆனால் உங்கள் தேர்வு எது என்பதை நீங்கள்தான் முடிவு செய்ய வேண்டும்.



ரபேல் ஒப்பந்தம் வேண்டுமானால் ரிலையன்ஸ் கட்டாயம் என்று மோடி அரசு வலியுறுத்தியதாக பிரான்ஸ் புலனாய்வு பத்திரிக்கையான மீடியா பார்ட் தகவல் வெளியிட்டுள்ளது.

இந்தியாவில் போர் விமானங்களின் தேவை குறித்து ஆய்வு செய்து அவ்வப்போது வெளிநாடுகளில் இருந்து வாங்குவது வழக்கம். இந்திய விமானப் படையில் கடைசியாய் சேர்க்கப்பட்ட போர் விமானம் 1996இல் ரஷ்யாவில் இருந்து வாங்கப்பட்ட சுகோய் விமானம் ஆகும். அதற்கு பிறகு நீண்ட நாட்களாக வெளிநாட்டில் இருந்து எந்த ஒரு போர் விமானத்தையும் இந்தியா வாங்கவில்லை.

இந்த நிலையில் போர் விமானங்களின் தேவை உணரப்பட்ட பின்பு 126 போர் விமானங்களை வாங்க, அப்போதைய மன்மோகன் சிங் தலைமையிலான அரசு முடிவு செய்தது. இதற்காக அமெரிக்கா, ரஷ்யா, பிரான்ஸ் போன்ற நாடுகளிடம் ஒப்பந்தப்புள்ளி கோரியது. பிறகு 2012ஆம் வருடம் பிரான்ஸ் நாட்டுடன் ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது.

126 போர் விமானங்களுக்கு ஒப்பந்தம் போடப்பட்டன. ஆனாலும் அதில் 18 விமானங்களை மட்டுமே பிரான்ஸ் நாடு பறக்கும் நிலையில் தயாரித்து இந்தியாவிற்கு அனுப்ப வேண்டும். மீதம் இருக்கும் 108 விமானங்களையும் இந்தியாவில் தயாரிப்பதற்காக தொழில்நுட்ப விவரங்களை இந்தியாவிற்கு அளிக்க வேண்டும் என்று அந்த ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது.

மன்மோகன் சிங் அரசின் (யூபிஏ) உத்தரவுக்கு ஏற்ப, 108 விமானங்களை தயாரிப்பதற்கு ஏற்ப இடங்கள் மற்றும் இதர தொழில் நுட்ப வசதிகள் அனைத்தையும் முன்னேற்பாடாக செய்து வைத்திருந்தது இந்துஸ்தான் ஏரோநாட்டிக்ஸ் நிறுவனம். இதனால் புதிய வேலை வாய்ப்புகள் ஏற்படும். தவிர, பாதுகாப்புத் தொழில்நுட்பத்துறையில் புதிய சாதனையை எட்ட முடியும் என்று அப்போது பலரும் பாராட்டினார்கள்.

இந்த நிலையில் 2014 ஆம் ஆண்டு நடந்த பொதுத் தேர்தலில் காங்கிரசு கட்சி தோல்வியடைய பா.ஜ.க. ஆட்சிக்கு வந்தது. மோடி பிரதமராக பதவியேற்றார்.

பிறகு 2015ஆம் ஆண்டு பிரதமர் நரேந்திர மோடி பிரான்ஸ் சென்றார். அப்போது காங்கிரசு கட்சியின் ஆட்சியில் போடப்பட்ட 126 ரபேல் போர் விமானங்களுக்கான ஒப்பந்தத்தை ரத்து செய்து அறிவித்தார். புதிய ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்டார்.

அதாவது 18 விமானங்களுக்குப் பதிலாக பறக்கும் நிலையிலேயே சுமார் 36 விமானங்களை பிரான்ஸ்

# பிஜேபியின் சத்தம் என்ற சத்தம் சுத்தமான பொய்!

நாட்டில் இருந்து வாங்கும். பறக்கும் நிலையில் விமானங்கள் வாங்கப்பட்டாலும் அதனுள் பல்வேறு தொழில் நுட்பக் கருவிகளை பொருத்தும் பணியையும், அதற்கான உதிரிபாகங்களை தயாரிக்கும் பணியையும் இந்தியா மேற்கொள்ளும்" என்று அந்த ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது.

ஆனால் இந்தப்பணியை அரசுத்துறை நிறுவன மான இந்துஸ்தான் ஏரோ நாட்டிக்ஸ் நிறுவனத்துக்கு ஒதுக்காமல், முன் அனுபவம் இல்லாத பா.ஜ.க.அரசுக்கு நெருக்கமான ரிலையன்ஸ் நிறுவனத்துக்குத் திடீரென ஒதுக்கப்பட்டது. இந்துஸ்தான் ஏரோ நாட்டிக்ஸ் நிறுவனம் இந்தியாவின் பாதுகாப்புப் படையில் உள்ள பல்வேறு விமானங்களைத் தயாரித்து வரும் ஒரு அரசு நிறுவனம். கடந்த 60 வருடங்கள் அனுபவம் உள்ள மத்திய அரசின் நிறுவனத்தை நிராகரித்துவிட்டு, இந்தத் துறையில் அனுபவமே இல்லாத ரிலையன்ஸ் நிறுவனத்துக்கு எப்படி அனுமதி அளிக்கப்பட்டது? என்ற சர்ச்சை எழுந்தது. இது குறித்து கட்சி கேள்வி களை எழுப்பியது.

இந்த நிலையில், ரிலையன்ஸ் நிறுவனம் ரபேல் ஒப்பந்தத்தில் இடம்பெற வேண்டும் என இந்திய அரசு வலியுறுத்தியதாக பிரான்ஸ் முன்னாள் அதிபர் பிரான்சிஸ் ஹாலண்டே தெரிவித்தார். இதன் பிறகு இந்த விவகாரம் சூடுபிடித்தது. இதனால், அனில் அம்பானிக்கு ஆதரவாக பா.ஜ.க.அரசு செயல்பட்டுள்ள தாக எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டின.

இக்குற்றச்சாட்டை பா.ஜ.க.தலைமையிலான மத்திய அரசு மறுத்தது. ரிலையன்ஸ் நிறுவனம் இந்திய பங்குதாரராக சேர்க்கப்பட்டதற்கும், தங்களுக்கும் சம்பந்தம் இல்லை என்று மத்திய அரசு தரப்பில் கூறப் பட்டது.

இந்நிலையில் பிரான்ஸ் நாட்டின் புலனாய்வு செய்தி நிறுவனமான மீடியா பார்ட் பத்திரிக்கை இது குறித்த செய்தி ஒன்றை வெளியிட்டுள்ளது.

ரபேல் ஒப்பந்தம் கையெழுத்தாக வேண்டுமெனில் இந்திய பங்குதாரராக ரிலையன்ஸ் நிறுவனம் இருக்க வேண்டும் என்று மோடி தலைமையிலான பா.ஜ.க. அரசு நிர்பந்தித்தது என்று அப்பத்திரிக்கை செய்தி வெளியிட்டுள்ளது. ரபேல் விமான ஒப்பந்தத்தில் இந்தத் தகவல் உள்ளதாக மீடியா பார்ட் கூறியுள்ளது.

ஏற்கனவே, ரபேல் விவகாரம் சர்ச்சையை ஏற் படுத்தியிருக்கும் நிலையில், தற்போது பிரான்ஸ் பத்திரிக்கை வெளியிட்டுள்ள தகவல் புதிய சர்ச்சைக்கு அச்சாரம் போட்டிருக்கிறது.

சுத்தம் சுத்தம் ஊழலற்ற மோடியின் அரசு என்ற போட்ட சத்தம் சுத்தமாகவே இப்பொழுது பொய் யென்று ஆகிவிட்டது எல்லா வகையிலும் மோடி தலைமையிலான அரசு அம்பலப்படுத்தப்பட்டு விட் டது. இதற்குச் சமீபத்திய ஆதாரம் தான் ரபேல் ஒப்பந்தம்.

நன்றி:அருள்மொழி.

## தலைமைச் செயலகமே வியந்த கருணாநிதி!

கருணாநிதி ஒருமுறை திருவாரூக்குச் சென்றிருந்தபோது உறவினர் குடும்பத்தினருக்குத் தெரிந்த ஒரு தாசில்தார் திடீரென மாரடைப்பால் இறந்துவிட்டார். துக்கம் விசாரிக்கச் சென்ற கருணாநிதியின் உறவினர்கள் ஒரு அதிர்ச்சியான தகவல் அறிந்து வீட்டுக்கு வந்திருந்த கருணாநிதியிடம் வேதனைப்பட்டு வருந்தினர்.

வெள்ளைச் சட்டைபோட்டு பந்தாவாக ஜீப்பில் வலம் வந்த தாசில்தார் வீட்டின் நிலைமை அன்று அவரை அடக்கம் செய்யக்கூட பணமின்றி தவித்ததைக் கேட்டறிந்து கருணாநிதி அதிர்ச்சிக்கு ஆளானார். அரசு ஊழியர்களின் பலரது நிலைமையும் அவ்வாறே என அறிந்து உடனடியாகத் தலைமைச் செயலாளருடன் தொடர்பு கொண்டு என்ன செய்யலாம் என்று விவாதித்தார். சென்னை திரும்பியவுடன் ஒரு ஆணை பிறப்பித்தார். (நாள்: 1-1-1974)


அரசு ஊழியர் ஒருவர் பணியிலிருக்கும்போது இறந்து விட்டால் உடனே ரூபாய் பத்தாயிரம் கொடுப்பது என்றும் அதற்காக மாதம் ரூபாய் பத்து பிடித்தம் செய்து கொள்ளலாம் என்பது ஆணை. இதுவரை எவ்வளவு பிடித்தம் என்பதைக் கணக்கில் கொள்ளாமல் எப்போது இறந்தாலும் இத்தொகை தரப்பட வேண்டும். இந்த ஆணை அமலுக்கு வந்த 1-1-1974 முதல்.

9-1-1974 அன்று ஒரு அரசு ஊழியர் இறந்து விட்டார். அவருக்குப் பணியின்போது உயிரிழந்தால் பத்தாயிரம் என்ற சட்டம் பொருந்தாது என அதிகாரிகள் சொல்லிவிட்டனர். ஏனெனில், மாதம் ரூபாய் பத்து பிடித்திருந்தால் தானே இத்திட்டம் பொருந்தும் என்பது அவர்களின் கூற்று.

அந்த ஊழியரின் மனைவி, முதல்வராக இருந்த கருணாநிதியைச் சந்தித்து முறையிட்டார். அந்த ஏழைக் குடும்பத்தின் நிலைமையைப் புரிந்து கொண்டு துறைச் செயலாளரைக் கூப்பிட்டுச் சொன்னார். இறந்த ஊழியர் 9 நாட்கள் பணிபுரிந்திருக்கிறார். அவரது ஒன்பது நாட்கள் சம்பளத்தில் இந்த ரூபாய் பத்தை கழித்துக்கொண்டு ரூபாய் பத்தாயிரம் கொடுக்கச் சொன்னார்.

இவ்வளவு சம்பவமும் அந்த ஊழியர் இறந்த 24 மணிநேரத்தில் நடந்து முடிந்து, இறந்த ஊழியரின் மனைவி யிடம் பத்தாயிரம் ரூபாய் அரசு நிதி வழங்கப்பட்டது. அவரது இந்த சாதுர்யமான நிர்வாகத்திறனையும் மின்னல் போல் செயல்படும் வேகத்தையும் பார்த்து அன்றைக்குத் தலைமைச் செயலகமே வியந்து போனது.

**பீமபெருமாள்** அண்ணாநகர்த் தமிழ்ச்சங்கம்.





### முதல் மாவீரர்

# லெப்டினன்ட் சங்கர்

லெப். சங்கர் (செல்வச்சந்திரன் சத்தியநாதன்) அவர்கள் 19.06.1961ஆம் ஆண்டு கம்பர்மலை, வல்வெட்டித்துறையில் பிறந்தார். 27. 11. 1982 அன்று மாவீரரானார்.

ஆயுதப்படைகள் வலை விரித்துத் தேடும் செ. சத்தியநாதன். இருபது வயதிலேயே தலைமறைவு வாழ்க்கையை மேற்கொண்ட கொரில்லா வீரன், தமிழீழ விடுதலைப்புலிகளின் தாக்குதற் பிரிவுத் தலைவன்.

கண் திறக்காத பூனைக்குட்டியாக நெஞ்சில் கனலும் புரட்சிகர உணர்வோடு சின்ன வயதிலேயே இயக்கத்திற்கு தன்னை அர்ப்பணிக்கக் காத்திருந்த வீரமறவன். அரச படையின் திடீர் முற்றுகையிலிருந்து தப்பிச் செல்லுகையில் சுற்றி நின்று கொமாண்டோக்கள் சரமாரியாக வெடிகளைத் தீர்த்தபோது காயமுற்று, எங்கள் இயக்கத்தின் முதலாவது களப் பலியாகும் பெருமையை அணைத்துக் கொள்கிறான்.

சங்கர் அச்சம் என்றால் என்னவென்று அறியாத அடலேறு. ஒரு சின்னப்பிசகு என்றாலும் கையோடு வெடித்து ஆளையே முடித்துவிடக்கூடிய வெடிகுண்டுகளின் தயாரிப்பிலும் அச்சமில்லாது ஈடுபடுவான். அரசப் படைகளின் தீவிரக் கண்காணிப் புக்கு மத்தியில் அவன் கிராமங்களின் வீதிகளில் சாதாரணமாக உலாவி வருவான். அதே நேரத்தில் சுழன்று கொண்டிருக்கும் விழிகள் சுற்றுப்புறச் சூழ்நிலைகளை நுணுக்கமாக அவதானித் தபடியே இருக்கும். தான் அறியாது செய்யும் சின்னத் தவறும்கூட ஒரு கொரில்லா வீரன் என்ற முறையில் தனக்கும் இயக்கத்திற்கும் ஆபத்து ஏற்படுத்தும் என்பதில், சங்கர் எப்போதும் விழிப்பாயி ருப்பான்.

அரச படைகளின் கையில் சிக்க நேருமானால் எதிரிகளில் ஒருவனையாவது வீழ்த்திவிட்டுத் தானும் சாவது என்பதில், அவன் அசைந்தது கிடையாது. விடுதலைப் போராளிகள் எனப்படுபவர்கள் ஆயுதங்களோடு பிடிபடும் செய்திகளைப் பத்திரிக்கையில் வாசிக்கையில் குமுறுவான். அமைதியான தன்மையும் அதிகம் பேசாத சுபாவமும் கொண்ட சங்கரின் இந்தக் குமுறலுக்கு, ஆழ்ந்த அர்த்தமுண்டு. ஆயுதங்களையும் வைத்துக் கொண்டு, அரசப் படைகளின் கையில் எதிர்ப்பு எதுவுமில்லாமல் ஒரு விடுதலைப் போராளி சரணடைவது கோழைத்தனமானது என்பது, சங்கரின் உறுதியான முடிவாக இருந்தது. குறிப்பாக, தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் ஆரம்ப கால கட்டங்களில், விடுதலைப் போராளிகளை ஆயுதங்களோடு அரச படைகள் கைது செய்வதை அனுமதிக்கும் போக்கானது, அரசப் படைகளுக்கு விடுதலைப் போராட்டத்தை முறியடித்து விடுவதில் நம்பிக்கையை ஊட்டி, அவர்களின் துணிச்சலைக் கூட்டிவிடும் என்று சங்கர் கருதினான்.

படுகாயமுற்ற நிலையிலும்கூட மதில் தாண்டிப் பாய்ந்து, தங்கள் கொரில்லாப் பிரிவின் மற்றொரு மறைவிடத்தை நோக்கித் தப்பிச் சென்றவன். பாதுகாப்பான இடம் வந்து சேர்ந்துவிட்டோம் என்று

தெரிந்த பின்தான் இடுப்பிலிருந்த ரிவோல்வாரை எடுத்து கீழே வைக்கிறான். உயிரோடும் ஆயுதத் தோடும் எதிரியின் கைகளில் பிடிபடாத ஒரு வீரனின் சாவு அவனுடையது.

இருபத்தொரு வயதில் அவன் சாதித்தவை தமிழீழப் போராட்ட வரலாற்றுக்குச் சொந்தமானவை. இனிமேல் சாரணர்களை அனுப்பி வடக்கில் புலிப்படையை அடக்கி விட முடியும் என்று, பாசிச சர்வாதிகாரி ஜே. ஆர். ஜயவர்த்தனா சிறீலங்காத் தலைநகரில் பிரகடனம் செய்தபோது, நெல்லியடியில் அரசப் படைகள்மீது சங்கர் நடத்திய கொரில்லாத் தாக்குதல் தமிழீழம் காணும் வரை தமிழீழப் போராட்டம் ஓயாது, ஒழியாது என்பதை அரசுக்கு எடுத்துக் காட்டியது. ஜீப் சாரதியின்மீது வெற்றிகரமான முதல் தாக்குதலை நடத்தி, ஜீப் வண்டியை நிறுத்த வைத்து, கதவைத் திறந்து சாரதியை ஒரு கையால் வெளியே எடுத்து எறிந்தவாறு, மறு எதிரியை நோக்கிக் குண்டுகளைத் தீர்க்கும் லாவகம் சங்கருக்கே உரியது. இடுப்பிலிருந்த ரிவோல்வரை எடுத்த மாத்திரத்தில் குறிவைக்கும் அவனது சாதுரியம் அசலானது. நெல்லியடியில், அரச படையினர் பீதியுற்ற நிலையில் சங்கர் கால்களை அகலவிரித்து, பக்கவாட்டில் நின்று அரசப் படையினர்மீது குண்டுமாரி பொழிந்த காட்சி, உலகமே வியக்கக்கூடிய ஒன்றாகும்.

சாவகச்சேரி காவல் நிலையத்தின்மீது சீலனின் தலைமையில் நடைபெற்ற கெரில்லாத் தாக்குதலின் வெற்றிக்கு, சங்கரின் பங்கும் கணிசமானதாகும். அரசாங்கத்தால் காவல் நிலையங்கள் உஷார்ப்படுத் தப்பட்டிருந்த நிலையில், மாடிக் கட்டிடத்தோடு பிரதான வீதியிலிருந்து சற்றுத்தள்ளி உள்ளே அமைந்திருந்த சாவகச்சேரி காவல் நிலையத்தின் மீது, முன்பக்க வாலுக்கூடாகத் தாக்குதல் நடத்துவது என்பது விஷப்பரீட்சைதான். ஆனால் உயிரைக் கடந்த காலத்திற்கு எழுதி வைத்துவிட்டு, புரட்சி வேள்வியில் குதித்திருக்கும் சங்கர், சீலன் ஆகிய போராளிகளின் முன்னே அபாயங்களும் தடைகளும் என்ன செய்துவிட முடியும்? ஜீ3 துப்பாக்கி சகிதம் சங்கர் படுத்துக்கிடந்து, சாவகச்சேரி காவல் நிலையத்தின் ஒரு பகுதிக்குப் பொறுப்பாக இருந்து நடாத்திய தாக்குதல், அப்பகுதி அரசப் படைகளை ஸ்தம்பிக்கச் செய்தது.

புலிகள் இயக்கத்தில் முதலாவது சாவை அணைத்துக் கொண்ட பெருமையுடன் துயில்கிறார் சங்கர்.

பொன்னாலைக் குண்டு வெடிப்பு நடவடிக் கையிலும் சங்கர் கடுமையாக உழைத்தவன். ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர் தம்பாப்பிள்ளை மீதான இயக்க நடவடிக்கைக்குச் சங்கரே பொறுப்பு வகிக்கிறான்.

எந்தவிதமான வாகனத்தையும் நேர்த்தியாகச் செலுத்தும் ஆற்றலும் சங்கரின் பல்முனைப்பட்ட ஆற்றலுக்குச் சான்றாகும். ஒரு கொரில்லா தாக்கு தலையடுத்து ஏற்படுகிற பரபரப்பு, எதிரிப் படைகள் ஸ்தலத்திற்கு வருமுன்னர் வெளியேற வேண்டிய பதைப்பு என்பவற்றிற்கும் மத்தியில், மிகுந்த வேகத்துடனும் அதிக நிதானத்துடனும் வாகனத்தைச் செலுத்துவதில் சங்கர் வல்லவர்.

சக போராளிகளுக்கு ஆயுதங்களைப் பயிற்றுவிக்கும் போது மிகுந்த கவனம் செலுத்துவார். தெளிவாக விளக்குவார். தனக்குத் தெரியாத விசயங்களை மற்றவர் களிடம் கேட்டுத் தெரிந்து கொள்வதில் ஆர்வம் கொண்டவர். அன்போடும் பணிவோடும் பழகுவதால் சக போராளிகளின் மத்தியில் தனி மதிப்பு வகித்து வந்தார்.

தமிழீழ விடுதலையைத் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல், இராணுவத் தலைமையிலேயே வென்றெடுக்க முடியும் என்பதில் அசையாத நம்பிக்கை கொண்டிருந்த சங்கர், இயக்கத்தில் தன்னையே கரைத்துக் கொண்டவர். விடுதலைப் போராட்டமே சங்கரின் முழுமூச்சாக இருந்தது. விடுதலைப் போராட்டத்திற்கென்றே ஆயுதமேந்திக் களத்திலே குதித்தவர் இந்த வீரர். சமூக விரோத நடவடிக் கைகளையும் சந்தர்ப்பவாதிகளையும் அவர் அறவே வெறுத்தார். அவர் மனசு மிகவும் சுத்தமானது. இத்தகைய இதயசுத்தி நிறைந்த போராளிகளே ஒரு விடுதலை இயக்கத்தின் தூய்மைக்குச் சாட்சியாக நிற்கிறார்கள்.


தலைவர் பிரபாகரனின் அரசியல் வழி காட்டலிலும், இராணுவக் கட்டுக்கோப்பிலும் சங்கர் ஊறி வளர்ந்தவர். பிரபாகரனின் அரசியல் தூய்மையில் அவன் எல்லையற்ற மதிப்பு வைத்திருந்தார். மலரப்போகும் தமிழீழம் தன்னலமற்ற தூய்மைமிக்க விடுதலைப் போராளிகளால்தான் தலைமையேற்று நடத்தப்பட வேண்டும் என்று, அவர் எப்போதுமே சொல்லி வந்திருக்கிறார். பதவிப் பித்தர்களும் துரோகிகளும் எங்கள் புனித இயக்கத்தின்மீது களங்கம் கற்பிக்க முனைந்தபோதெல்லாம், அமைதியான இந்தப் போர் மறவர் சினங்கொண்டு எழுந்திருக்கிறார்.

சாகும் தருவாயிற்கூட அவன் தன் உற்றார், பெற்றாரை நினைக்கவில்லை. “தம்பி... தம்பி“ என்றுதான் அந்த வீரரின் உதடுகள் வார்த்தைகளை உதிர்த்தன. தம்பியும், மற்ற இயக்கப் போராளிகளும் கண்கலங்கி நிற்க அந்த வீரமகன் சாவிலே வீழ்ந்து போனார்.

‘ஒரு உண்மை மனிதனின் கதை’ என்ற ரஷ்ய நாவலைக் கடைசியாக வாசித்துக் கொண்டிருந்த சங்கர், அந்த நாவலை முழுதும் வாசித்து முடிக்க வில்லை. சங்கர் என்ற உண்மை மனிதனின் கதை, ஒரு வீர காவியம்தான்!

# சாதி அமைப்பு முறையின் அடிவேர் வரை சென்று அலசி எடுத்திருக்கிறார் இயக்குநர் பா.இரஞ்சித்

**[விடுதலை ஞாயிறு மலரில் திராவிடர் கழகத் துணைத் தலைவர் கலிபூங்குன்றன் கட்டுரை]**



இயக்குநர் தோழர்.பா.இரஞ்சித் அவர்களின் பார்வைக்கு,

முற்போக்குக் கொள்கை உடைய திரைப்பட இயக்குநர் தோழர்.பா.ரஞ்சித் அவர்களின் பேட்டி ஒன்றை தி எக்னாமிக் டைம்ஸ் ஏட்டில் (2018 நவம்பர் 25, டிசம்பர் 1) வெளிவந்துள்ளது.

சாதி அமைப்பு முறையின் அடிவேர் வரை சென்று அலசி எடுத்திருக்கிறார். அதன் பார்ப்பன மூலத்தையும் அடையாளம் கண்டு தோலுரித்துத் தொங்க விடுகிறார்.

அன்றாட வாழ்க்கையில் சாதியின் தாக்கங்களைத் தங்கு தடையின்றி விமர்சனக் கோடாரியால் பிளந்து தள்ளியுள்ளார். நாட்டில் நடைபெறும் சாதியவாதம், தாழ்த்தப்பட்டவர்கள் மீதான வன்முறைகள் பற்றி எல்லாம் பொறுப்புணர்ச்சியுடனும் வேதனைக் குமுறலுடனும் விளாசித் தள்ளியுள்ளார், பாராட்டுகள்.

அதே நேரத்தில் பெரியார் இயக்கம் பற்றி அவர் விமர்சித்துள்ள பகுதிகள் நமது விமர்சனத்துக்கு உட்பட்டவையாகும்.

பெரியார் இயக்கம் என்பது பார்ப்பனரல்லாதோர் மற்றும் பார்ப்பனர்களுக்கிடையேயான போராட்டம் என்றுதான் கூறலாம். பார்ப்பனர்கள் கைகளில் இருந்து பார்ப்பனரல்லாதார் கைகளுக்கு அதிகாரங்கள் வந்த பிறகு அவர்கள் பார்ப்பனர்களுக்குத் துணை போகும் செயலில் இறங்கிவிட்டார்கள் என்று ஓரிடத்தில் குறிப்பிட்டுள்ளார்.

பார்ப்பனரல்லாதார் என்று சொல்லும் போது அதில் ஆண்டாண்டு காலமாக ஒடுக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களும் இடம்பெற மாட்டார்களா? அண்ணல் அம்பேத்கர் பார்ப்பனர்களை எதிர்க்க வில்லையா, அவர்கள் மூலக்கருத்தை மூர்க்கமாக தாக்கவில்லையா, பார்ப்பனர்களை எதிர்த்த வரிசையில் தாழ்த்தப்பட்டவர்கள் மட்டும்தான் என்று பொருள் கொள்ள முடியுமா? அதன் பலன் யாரிடம் போய்ச் சேர்ந்தது என்பதை இயக்குநர் இரஞ்சித் போன்றவர்கள் விளக்குவது நல்லது.

பெரியார் இயக்கத்தால் நடத்தப்பட்ட பார்ப்பன எதிர்ப்புப் போராட்டங்களால் பிரச்சாரத்தால் தாழ்த்தப்பட்டவர்களுக்கு எந்தப் பலனும் கிடைக்கவில்லை என்பதுதான் தோழர் இரஞ்சித்தின் கருத்தா?

துவக்கத்தில் தந்தை பெரியார் நடத்திய போராட்டமும் சேரன்மாதேவியில் நடத்திய போராட்டமும் தாழ்த்தப்பட்டவர்களை நீக்கித்தானா? வைக்கத்தில் பெரியார் நடத்திய போராட்டம் தாழ்த்தப்பட்டவர்களுக்கான உரிமைப் போராட் டத்தை மகத்தில் நடத்திட அண்ணல் அம்பேத் கருக்குத் தூண்டுகோலாக இருந்தது என்று அம்பேத்கர்

வாழ்க்கை வரலாற்றை எழுதிய தனஞ்செய் கீர் குறிப்பிடவில்லையா? தாழ்த்தப்பட்ட மக்களுக்குத் தனித் தொகுதி கேட்டுப் போராடி வெற்றி பெற்றார் அண்ணல் அம்பேத்கர். அதன் பலன் கிடைக்காமல் போனதற்குக் காந்தியார்தான் காரணம். அதனை எதிர்த்த காந்தியார் உண்ணாவிரதம் இருந்தார். அண்ணல் அம்பேத்கருக்குக் கடும் நெருக்கடி கொடுக்கப்பட்டது. அய்ரோப்பிய நாடுகளில் சுற்றுப் பயணத்தில் இருந்த தந்தை பெரியார், ஒரு காந்தியாருடைய உயிரைவிட ஆறுகோடி தாழ்த்தப் பட்ட மக்களின் உயிர் உங்கள் கைகளில் இருக்கிறது என்பதை மறந்து விடாதீர்கள் என்று தந்தி கொடுத்தது யாருடைய உரிமைக்காக?

பறையன் பட்டம் போகாமல் உங்களுடைய சூத்திரப் பட்டம் போய்விடும் என்று கருதுவீர் களானால் நீங்கள் வடிகட்டின முட்டாள்களே யாவீர்கள் (குடிஅரசு, 11101931) என்று பிற்படுத்தப்பட்ட மற்றும் முன்னேறிய மேல்சாதி மக்களான சூத்திரர் களுக்கு சாட்டை அடி கொடுத்தவர் தந்தை பெரியார் அல்லவா? தாழ்த்தப்பட்ட குடியிருப்பு களுக்குச் சென்று சுயமரியாதைத் திருமணங்களை நடத்தி வைத்து, உணவுண்டு, சூத்திர பஞ்சம மக்கள் என்ற பார்ப்பன வருணாசிரமத்தால் பிளவுண்டு கிடந்த மக்களிடையே இணைப்புப் பாலத்தை ஏற்படுத்தியது பெரியார் இயக்கம்தானே.

நான் ஏராளமான சுயமரியாதைத் திருமணங் களுக்கு தலைமை தாங்கி நடத்தி இருக்கிறேன். பெரியார் அவர்கள் கலந்து கொண்ட திருமணங்க ளிலும் கலந்து கொண்டு பேசி இருக்கிறேன்.

சென்னை பெரம்பூரில் பெரியார் தலைமையில் ஒரு சுயமரியாதைத் திருமணம் நடைபெற்றது. கடுமையான மழை, தாழ்த்தப்பட்டோர் பகுதி, ஒரே, சேரும் சகதியுமாகிவிட்டது. திருமணம் முடிந்து சாப்பிட்டுப் போகச் சொன்னார்கள். நான் ஏதோ சமாதானம் சொல்லி சாப்பிடவில்லை. பெரியார் என்ன செய்தார் தெரியுமா, மேலே இருந்த ஓலையைக் கீழே எடுத்துப்போட்டு அப்படியே உட்கார்ந்து சாப்பிட ஆரம்பித்து விட்டார். பெரியார் எந்தவித ஏற்றத்தாழ்வும் பார்க்க மாட்டார். (நீதிக்கட்சி பவளவிழா மலரில் மீனாம்பாள் சிவராஜ் பேட்டி 1992 பக்கம் 125) திராவிடர் கழகத்திற்கே பள்ளன் கட்சி, பறையன் கட்சி என்றுதானே பெயர் சூட்டப்பட்டது.

தங்களைத் தாழ்த்தப்பட்டவர்களை விட உயர்வானவர்கள் என்று மமதை கொண்டிருந்தவர் களின் மண்டையில் அடிக்கும் வண்ணம் பஞ்சமன் என்பதை விட சூத்திரன் என்பது தான் கேவலம், சூத்திரன் என்றால் வேசி மகன், பஞ்சமன் என்றால் அவர்கள்தான். அவர்கள் அப்பா அம்மாவிற்கு முறையாகப் பிறந்தவன் என்று முகத்தில் அடித்துச் சொன்னவர் தந்தை பெரியார். (குடிஅரசு 16.6.1929)

மனித வாழ்க்கையின் நன்மைகளை உத்தேசித்தும், ஜீவகாருண்யத்தை முன்னிட்டும், தேச முன்னேற்றத்துக் காகவும் நம் நாட்டில் பெரும் பகுதியினர் மீது சுமத்தப்பட்டுள்ள தீண்டாமை என்னும் கொடிய தடையை விலக்க பொது ஜனங்களிடையே இடை விடாது பிரச்சாரம் செய்து அவர்களைக் கண்விழிக்கச் செய்ய வேண்டும் என்று தந்தை பெரியார் அவர்களே இரண்டாவது சென்னை மாகாண தீண்டாமை விலக்கு மாநாட்டில் முன்மொழிந்தார். (குடியரசு 17.2.1929)

ஆண்டாண்டு காலமாக தீண்டத்தகாதவர்கள் என்று ஒதுக்கப்பட்ட, ஒடுக்கப்பட்ட மக்களின் தீண்டாமைக் கொடுமையை வெறும் சட்டத்தால் ஒழித்துவிட முடியாது. மக்கள் மத்தியில் சிந்தனை மாற்றத்தைச் செய்தாக வேண்டுமே. அதன் முன்னணி ஆயுதமாக இருப்பது பிரச்சாரமே அதனை ஒரு நூற்றாண்டு காலமாக செய்து வருவது பெரியார் இயக்கம் இல்லையா? இதுபோல் எந்த மாநிலத்திலாவது பத்தில் ஒன்று நடந்திருக்கிறதா?

சென்னை தீண்டாமை விலக்கு மாநாடு (10.2.1929)

கள்ளக்குறிச்சி தென்னாற்காடு மாவட்ட ஆதிதிராவிடர் மாநாடு (16.6.1929)

சென்னை ஆதிதிராவிடர் மாநாடு (21.7.1929)

இராமநாதபுரம் ஆதிதிராவிடர் மாநாடு (25.8.1929)

திருநெல்வேலி தீண்டாமை விலக்கு மாநாடு (10.6.1931)

சேலம் ஆதிதிராவிடர் மாநாடு (16.5.1931)

லால்குடி தாலுகா ஆதிதிராவிடர் மாநாடு (7.6.1931)

திருச்சி ஆதிதிராவிடர் மாநாடு (5.7.1931)

கோவை ஆதிதிராவிடர் மாநாடு (5.7.1931)

தஞ்சை ஜில்லா ஆதிதிராவிடர் மாநாடு (4.7.1931)

கோவை ஆதிதிராவிடர் மாநாடு (7.12.1931)

லால்குடி தீண்டப்படாதவர் மாநாடு (7.2.1932)

அருப்புக்கோட்டை தாலுகா தாழ்த்தப்பட்டோர் மூன்றாவது மாநாடு (28.8.1932)

லால்குடி தாலுகா ஆதிதிராவிடர் கிறித்தவர் மாநாடு (7.5.1933)

சென்னை தாழ்த்தப்பட்ட கிறித்தவர் மாநாடு (7.8.1933)

தஞ்சை ஜில்லா மூன்றாவது ஆதிதிராவிடர் மாநாடு (9.7.1935)

சீர்காழி ஆதிதிராவிடர் மாநாடு (10.7.1935)

சேலம் ராசிபுரம் ஆதிதிராவிடர் மாநாடு (7.3.1936)

திருச்செங்கோடு ஆதிதிராவிடர் மாநாடு (7.3.1936)

பெரியகுளம் தாலுகா தேவேந்திரகுல மாநாடு (3.8.1936)

சேலம் ஜில்லா ஆதிதிராவிடர் மாநாடு (2.9.1936)

சிதம்பரம் ஆதிதிராவிடர் மாநாடு (6.5.1937)

*ஆம்பூர் ஆதிதிராவிடர் மாநாடு (4.7.1937)*

*திருச்செங்கோடு தாலுகா ஆதிதிராவிடர் மாநாடு (8.7.1937)*

*அருப்புக்கோட்டை தாழ்த்தப்பட்டோர் மாநாடு (3.1.1938)*

*இப்படியாக அடுக்கிக் கொண்டே போகலாம்.*

*தீண்டாமை ஒழிப்பு, பொதுவுரிமை, கல்வி வேலைவாய்ப்பில் இட ஒதுக்கீடு இவற்றை உள்ளடக்கிய தீர்மானங்கள்தான் ஒவ்வொரு மாநாட்டிலும் பிரச்சாரமேமோ அடைமழை! அடைமழை!! இவையெல்லாம் வீண் போகவில்லை. ஏய், டேய், போடா, வாடா என்ற சொல் பிரயோகங்கள் புதையுண்டு போகவில்லையா? சூத்திரச்சி வந்து விட்டாளா என்று இன்று கேட்க முடியுமா?*

*பெயருக்குப் பின்னால் சாதி வால் தொங்குவது அறவே ஒழிந்து போனது தமிழ்நாட்டில்தான் என்றால் இதற்கு வித்திட்டது பெரியார் இயக்கம் அல்லவா? நீதிக்கட்சி ஆட்சியில் தானே இடஒதுக்கீடு கொண்டு வரப்பட்டது தாழ்த்தப்பட்டவர்களுக்கு உட்பட (1928)*

*எந்தப் பொதுச் சாலையிலோ, தெருவிலோ, அது எந்தக் கிராமத்திலோ அல்லது நகரத்திலோ இருந்தாலும் அதில் எந்த இனத்தைச் சேர்ந்த மனிதனாய் இருந்தாலும் நடப்பதற்கு உள்ள உரிமையை யாரும் தடுக்க முடியாது என்பதையும் எந்த அரசாங்க அலுவலகமாக இருந்தாலும் அல்லது கிணறு, குளம் போன்றவைகளாய் இருந்தாலும் அல்லது பொது வர்த்தகம் நடைபெறும் இடமாய் இருந்தாலும் இவைகளில் எல்லாம் சாதி இந்துக்களுக்கு என்னென்ன உரிமைகள் இருக்கின் றனவோ, அவ்வளவு உரிமைகளும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு உண்டு என்பதையும் சென்னை அரசாங்கம் ஒப்புக் கொண்ட, அதைத் தீர்மானமாக நிறைவேற்றி, எல்லா மாநகராட்சி, நகராட்சி, பஞ்சாயத்து மற்றும் அரசாங்கத்தில் உள்ள எல்லா இலாகாக்களும் அனுப்பப்பட்டது.*

*நீதிக்கட்சி ஆட்சியில் பனகல் அரசர் பிரதமராக இருந்த போது கொண்டு வரப்பட்ட ஆணை இது. தாழ்த்தப்பட்டவர்கள் பேருந்துகளில் அனுமதி, பள்ளிகளில் அனுமதியெல்லாம் நீதிக்கட்சி ஆட்சியில்தான். தொழிலாளர் துறை என்பது முழுக்க முழுக்க தாழ்த்தப்பட்டவர்களின் முன்னேற்றத்திற்கே!*

*இவையெல்லாம் பழைய கதை என்று சொல்லலாம். தந்தை பெரியார் அவர்களின் இறுதி மூச்சு அடங்கும் வரை உரிமை மறுக்கப்பட்ட மக்கள் பக்கமே தன் சிந்தனைகளையும் செயல்களையும் அர்ப்பணித்தார். கோயில் கருவறைக்குள் தாழ்த்தப் பட்டவர்கள் போகக்கூடாதா? அவர்கள் அர்ச்சனை செய்ய மறுப்பது ஏன் என்ற களத்தில் நின்று தானே இறுதி மூச்சையும் துறந்தார். இன்று அது செயல் பாட்டுக்கு வந்து விட்டதே. முதலில் மனிதனுக்குச் சுயமரியாதையை ஊட்டுவது, மூட நம்பிக்கைகளிலிருந்து விடுதலை செய்து பகுத்தறிவுப் பாதையில் திருப்புவது, எதைக் கொடுத்தாலும் கல்வியை ஒடுக்கப்பட்ட மக்களுக்குக் கொடுக்கக் கூடாது என்ற வர்ணாசிரம கோட்பாடு கோட் டையை உடைத்து, கல்வி வேலை வாய்ப்புகளில் உரிய பங்கு பெறுவது என்பது தாழ்த்தப்பட்டவர்களுக்கும் பெரியார் இயக்கத்தின் பங்களிப்பு இல்லாமல் வேறு எங்கிருந்து குதித்தது? இவை எல்லாம் அதிகார பங்கேற்பதற்கான உந்துதல் இல்லையா?*

*சென்னை உயர்நீதிமன்றத்தில் தாழ்த்தப்பட்டவர்கள் ஏன் நீதிபதியாக வர வாய்ப்பில்லை என்ற தந்தை பெரியாரின் கேள்விக்கு விடைதானே ஒரு ஜஸ்டிஸ் வரதராஜன். அவர்தானே உச்ச நீதிமன்றத்திற்குள்ளும் நுழைந்த முதல் தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த நீதிபதியும்கூட. சென்னை உயர்நீதி மன்றத்தில் ஒரே நேரத்தில் 10 தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த நீதிபதிகள் வருவதற்கான கால்கோள் விழாவை நடத்தியது யார்? அது அதிகாரப் பகிரிவின் கீழ் வராதா?*

*தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த இளவரசன், திவ்யா என்ற பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த பெண்ணைக் காதலித்துத் திருமணம் செய்து கொண்ட நிலையில், தர்மபுரி மாவட்டத்தைச் சேர்ந்த நத்தம் பழைய கொண்டாம்பட்டி, அண்ணாநகர், புதிய கொண்டாம்பட்டி வாழ் தாழ்த்தப்பட்ட மக்களின் குடியிருப்புகளைச் சாதி வெறியர்கள் கொளுத்தி சாம்பலாக்கிய நிலையில் (7.11.2012) உடனடியாக பாதிக்கப்பட்ட பகுதிக்கு திராடவிடர் கழகத் தலைவர் வீரமணி அவர்களின் தலைமையில் கழகப் பொறுப்பாளர்கள் நேரில் சென்று ஆறுதல் கூறியதுடன் உடனடியாக அங்கு சாதி ஒழிப்பு மாநாட்டை அனைத்துக் கட்சியினரையும் அழைத்து நடத்தியது திராவிடர் கழகம் தானே.(9.12.2012)*

*ஓசூர் அருகே சூடைக்காந்தப் பள்ளியைச் சேர்ந்த சாதி மறுப்புத் திருமணம் செய்து கொண்ட நந்திஷ் சுவாதியை பெற்றோர்களே தீவைத்து எரித்துக் கொன்ற கொடூர நிலையில் (13.12.2018) 30ஆம் தேதி சாதி தீண்டாமை ஒழிப்பு மாநாடு திராவிடர் கழகத்தின் சார்பில் ஓசூரில் நடத்தப்பட்டது. இவையெல்லாம் அலட்சியப்படுத்தப்பட வேண்டியவை என்று கண்டிப்பாக இயக்குநர் தோழர் ரஞ்சித் சொல்ல மாட்டார் என்று நமக்கு உறுதியாகவே தெரியும்.*

*எல்லாம் முடிந்து விட்டது. சமத்துவமும், சகோதரத்துவமும் கைகோர்த்து விட்டன என்று யாரும் மார்தட்டவில்லை. ஆயிரம் ஆயிரங்காலத்து வருணாசிரமம் நம் மக்களின் மூளையில் விலங்காகப் பூட்டப்பட்டு விட்டது.*

*மூளையில் மாட்டப்பட்ட விலங்கை அவ்வளவு எளிதாக விலக்க முடியாது. அதே நேரத்தில் நாம் தோல்வி அடைந்துவிட்டோம் என்ற தாழ்வு*

மனப்பான்மை தேவையில்லை. நடந்திருக்கின்ற மாற்றங்களை பரிகசிப்பதோ, உதாசீனப்படுத்தவதோ, ஆரோக்கியமானதுமல்ல. மகத்தான உழைப்பும் தியாகமும் இந்த மாற்றத்தின் வேரில் குருதியாகக் கொட்டப்பட்டுள்ளது. இந்திய அரசமைப்புச் சட்டத்தில் சாதியைப் பாதுகாக்கும் பகுதியை நீக்க வேண்டும் என்று கூறி, சாதியைப் பாதுகாக்கும் சட்டப் பகுதியை எரித்து மூன்றாண்டு காலம் வரை சிறைத்தண்டனை ஏற்ற பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட திராவிடர் கழக கருஞ்சட்டைக் குடும்பத்தினரைக் கொஞ்சம் நினைத்துப் பாருங்கள் இரஞ்சித் அவர்களே!.

நமது ஒடுக்கப்பட்ட மக்கள் மத்தியிலேயே கூட உயர்வு தாழ்வு, மேல், கீழ்நிலை இருக்கத்தானே செய்கிறது. இட ஒதுக்கீடே எங்களுக்கு வேண்டாம் என்றும் நாங்கள் சாதியில் உசத்தி, தேவேந்திரர் என்று சொல்லுபவர்களும் நம்மிடத்தில் இருக்கத்தானே செய்கிறார்கள். இவர்களையும் நாம் எதிர்க்க வேண்டிய கெட்ட வாய்ப்பையும் நினைக்க வேண்டிய தருணம் இது.

மனித சமத்துவம் ஊட்டும் கல்விமுறை கொணர்வது, பகுத்தறிவு, விஞ்ஞான சிந்தனைகளை வளர்ப்பது என்கிற முறையிலே மாற்றங்கள் கொண்டு வர தாழ்த்தப்பட்டவர்களும், பிற்படுத்தப்பட்ட வர்களும் ஒன்றிணைந்து பயணிக்க வேண்டும். இருவரும் வலதுகரம், இடதுகரம் என்று அண்ணல் அம்பேத்கர் கூறியதை கவனத்தில் கொள்ள வேண்டும். தந்தை பெரியார் பார்ப்பனர் பார்ப்பனரல்லாதார் போராட்டத்தைத் தொடங்கி அவர் நினைத்த அளவில் இல்லையென்றாலும் எதிரிகள் மிரளும் அளவிற்கு மகத்தான வெற்றி பெற்றுள்ளார் என்பதுதான் வரலாறு.

234 சட்டமன்ற உறுப்பினர்கள் உள்ள தமிழ்நாடு சட்டப்பேரவையில் இரண்டே இரண்டு பார்ப் பனர்கள்தான் உறுப்பினர்கள். இந்த நிலை இந்தியா வில் எந்த மாநிலத்தில் உண்டு. சற்றே எண்ணிப் பார்க்க வேண்டும். நண்பர்கள் யார், பகைவர்கள் யார், என்பதைத் தெரிந்து கொள்வதில்கூட இன்னும் தயக்கமும் குழப்பமும் இருப்பது எந்த வகையிலும் நியாயமாகாது.

பெரியார் இயக்கம் பார்ப்பனர் அல்லாதோர் மற்றும் பார்ப்பனர்களுக்கு இடையேயான போராட்டம் என்றுதான் கூறலாம். பார்ப்பனர்களில் இருந்து பார்ப்பனர் அல்லாதவர்களுக்கு அதிகாரங்கள் வந்த பிறகு அவர்கள் பார்ப்பனர்களுக்குத் துணை போகும் செயலில் இறங்கி விட்டார்கள். சாதியை எதிர்த்துப் போராட முன் வரவில்லை. அதிகாரத்தின் சுவையில் மூழ்கி விட்டார்கள். பார்ப்பனீயத்தை அழிக்க வேண்டுமென்றால் பார்ப்பனிய சிந்தனையை ஒழிக்க வேண்டும். பார்ப்பனர்களின் கைகளில் இருந்து அதிகாரத்தைத் தங்கள் கைகளில் எடுத்துக் கொண்டு தங்கள் பார்ப்பனியக் கொள்கைகளைக் கடைபிடிக்கத் தொடங்கி விட்டனர். பார்ப்பனர் பார்ப்பனர் அல்லாதோர் போராட்டம் தற்போது தாழ்த்தப்பட்ட மற்றும் நடுநிலை சாதியினருக்கு இடையேயான போராட்டமாகி விட்டது. என்றெல்லாம் பொத்தாம் பொதுவாக இயக்குநர் இரஞ்சித் குற்றப் பத்திரிக்கை படிப்பது சரிதானா?

திமுக சார்பில் ஆட்சிக்கு வந்த கலைஞர் அப்படி என்ன உயர்ந்த சாதிப் பட்டியலில் இடம் பெற்றவர்தானா? கதர் சட்டைக்குள் கறுப்புச் சட்டை என்று பார்ப்பனர்களால் அடையாளம் காட்டப்பட்ட காமராசர் அப்படியென்ன பெரிய சாதி?

கலைஞரையும் சரி, காமராசரையும் சரி பார்ப்பனர்கள் ஏற்றுக் கொண்டு விட்டனரா இன்று வரை கூட? கலைஞர் வீட்டில் தாழ்த்தப்பட்ட சமூக மருமகள்கள் வரவில்லையா? அது ஒரு நம்பிக்கை ஏற்படுத்தாதா? அரசியல் தேர்தல் பதவி பக்கம் செல்லாத திராவிடர் கழகம் சாதி, தீண்டாமை ஒழிப்பு, மூடநம்பிக்கை ஒழிப்புப் பணிகளில் மட்டுமே கவனம் செலுத்தி தன் ஆயுளையே ஒப்படைத்துக் கொண்டு பணியாற்றுகிறதே, திராவிடர் கழகத்தினரிடமிருந்து ஸ்டாலின் விலகி இருக்க வேண்டும் என்று பார்ப்பன ஏடுகள் இலவசமாக அறிவுரை சொல்லுவது எந்த அடிப்படையில்?

வெறும் விமர்சனம் செய்யும் இடத்தில் உட்கார்ந்து கொண்டு எதை வேண்டுமானாலும் பேசலாம் நாங்கள் களத்தில் நிற்பவர்கள். அத்தகையவர்களை நோக்கி களங்கமான கற்களை வீசுவது, யாருக்கோ தான் பயன்படும்.

கல்வி, வேலைவாய்ப்பில் வளர்ச்சி என்பதே ஒரு வகையான அதிகார மேல்நிலைதான். முதல் அமைச்சர் நாற்காலியில் வந்தால் தான் ஏற்கமுடியும் என்பதல்ல. ஒரு பாலகிருஷ்ணன் உச்சநீதிமன்ற தலைமை நீதிபதியாக வந்த நிலையில் அனைத்து சாதியினருக்கும் அர்ச்சகர் உரிமை வழக்கில் சமூக நீதியான தீர்ப்பு கிடைக்கும் என்று எதிர்பார்த்தோம். வழக்கின் கட்டைத் தொட்டுக்கூட பார்க்கவில்லை என்பதற்காக வருத்தப்படலாம் அவ்வளவுதான்.

அதற்குமேல் விமர்சிக்கலாமா? விமர்சன கர்த்தாக்கள் கீழே இறங்கி வரட்டும், கைகோக்கட்டும், வரவேற்கிறோம். பெரியார் இயக்கத்தின் பெரும் பணியை கொச்சைப்படுத்துவது, பெரியார் சிலையை உடைப்பவர்களுக்கும் இந்துத்துவா சக்திகளுக்கும்தான் தீனி போட உதவும். தோழர் இரஞ்சித் போன்றவர்கள் பெரியார், அம்பேத்கர் சிந்தனைகளை உள்வாங்கி நடைபோடட்டும். ஏற்கெனவே தலித் அல்லாதார் கூட்டணியை உண்டாக்க முயற்சித்தவர்கள் கரங்களை வலுப்படுத்தி விடக்கூடாது. தோழர் இரஞ்சித்துக்கு வாழ்த்துகள். ●




# தொல்காப்பியம் சுட்டும் ஆறு அறிவுகள்...!

தமிழுக்கு இலக்கணம் வகுத்த தொல்காப்பியர் உலகில் வாழும் உயிரினங்களை வகைப்படுத்திக் கூறியிருக்கிறார். கீழ்க்கண்ட இந்த நூற்பா தொல்காப்பியத்தின் பொருளதிகாரத்திலுள்ள மரபியல் பகுதியில் இடம் பெற்றுள்ளது:

'ஒன்றறிவு அதுவே, உற்று அறிவதுவே,
இரண்டறிவு அதுவே, அதனொடு நாக்கே,
மூன்றறிவு அதுவே, அவற்றொடு மூக்கே,
நான்கறிவு அதுவே, அவற்றொடு கண்ணே,
ஐந்தறிவு அதுவே, அவற்றொட செவியே,
ஆறறிவு அதுவே, அவற்றொட மனனே,
நேரிதின் உணர்ந்தோர் நெறிப்படுத்தினரே...!

இயற்கை, உயிரினங்களைப் படைத்துள்ள விதம் வியப்பை அளிக்கிறது. இதில் 'அறிவு' என்பது புத்தகம் படிப்பதும் மதிப்பெண் பெறுவதும் பணிக்குச் செல்வதும்தான் என்பதல்ல, குளிர் அதிகமாக இருக்கும் சமயத்தில் வெளியே அதிகம் செல்வதைக் குறைத்துக் கொண்டு உள்ளேயே இருந்து கொள்வதும் வெய்யில் அதிகமாக இருக்கும்போது தண்ணீர் நிறைய குடிக்க வேண்டும் என்ற உணர்வு உண்டாவதுவும்கூட அறிவு சம்மபந்தப்பட்டதுதான். இது விலங்கினங்கள், பறவை போன்றவற்றுக்கும் கூட பொது நிலைப்பாடே ஆகும்.

ஆக 'அறிவு' என்பது பலவகைப்படும். அந்த அடிப்படையின்படி நோக்கினால் தாவங்களுக்கும் ஓரறிவு உண்டு. பிறர் தன்னைத் தொடுகிறார்கள் என்று உணரும் அறிவுதான் அது. நம் தமிழ்மொழியில் இதனை 'உற்றறிதல்' என்பர். இந்த ஒரே அறிவு மட்டும் கொண்ட தாவர இனத்தை 'ஓரறிவுயிர்கள்' என்று அழைப்பர்.

நத்தை, சங்கு, சிப்பி ஆகியவற்றுக்கு உற்றறிகிற அறிவு உண்டு. அத்துடன், தன்னுடைய உணவை நாக்கினால் சுவைத்து அறிகிற இன்னோர் அறிவும் இருக்கிறது. ஆகவே, இவற்றை 'ஈரறிவுயிர்கள்' என்பர்.

எறும்புகளுக்கு, இந்த இரு அறிவுகளும் உள்ளன. அதோடு மூன்றாவதாக மோப்பம் பிடிக்கின்ற இன்னோர் அறிவும் இருக்கிறது. ஆகவே, இவற்றை 'மூவறிவுயிர்கள்' என்பர்.

நண்டு, தும்பி ஆகியவற்றுக்கு இந்த மூன்று அறிவுகளும் உள்ளன. மேலும் நான்காவதாக, தங்களைச் சுற்றியுள்ளவற்றைக் கண்ணால் கண்கின்ற இன்னோர் அறிவும் இருக்கிறது. ஆகவே, இவற்றை 'நான்கறிவுயிர்கள்' என்பர்.

நாய், ஆடு, மாடு ஆகியவற்றுக்கு இந்த நான்கு அறிவுகளும் உள்ளன. அவற்றுடன் ஐந்தாவதாக தங்களைச்சுற்றி எழும் ஓசைகளைச் செவியால் உணர்கிற இன்னோர் அறிவும் இருக்கிறது. ஆகவே, இவற்றை 'ஐந்தறிவுயிர்கள்' என்பர்.

நிறைவாக மனிதனுக்கு இந்த ஐந்தறிவுகளோடு, மேலும் ஆறாவதாகச் சிந்தித்த இது சரி, இது தவறு என்று பகுத்து அறிகின்ற இன்னோர் அறிவும் இருக்கின்றது. ஆகவே, மனிதனை 'ஆறறிவுயிர்' என்கிறோம். இதுவே மனிதனை மற்ற அனைத்து உயிரினங்களில் இருந்தும் உயர்த்துகிறது. பிற உயிர்களை எல்லாம் அவன் ஆள்வது இதனால்தான் என்று இதனை நாம் கொள்ளலாம்.

அதேசமயம், முதல் ஐந்து அறிவுகளும் குறைவானவை என்று பொருளில்லை. இவை ஒவ்வொன்றுமே வெவ்வேறு வகையில் நம்முடைய அன்றாட இயக்கத்துக்கு உதவுகின்றன. இனிமையான பயனுள்ள வாழ்க்கைக்குத் துணை புரிகின்றன.

ஆக, உற்றறிதல், முதல் அறிவு அத்துடன் நாக்கு சுவையுணர்தல் சேரும்போது ஈரறிவு. அத்துடன் மூக்கு மோப்பம் சேரும்போது மூவறிவு, அத்துடன் கண் பார்த்தல் சேரும்போது நான்கறிவு, அத்துடன் காது கேட்டல் சேரும்போது ஐந்தறிவு. மேலும், அத்துடன் மனம், சிந்தித்தல், சிரித்தல், பகுத்தறிதல் சேரும்போது ஆறறிவு என்று விரிகின்றது.

தொல்காப்பியத்தைப் போற்றுவோம்!.

தொகுத்தவர், **பீமபெருமாள்.**



# இந்தியப் பல்கலைக்கழகங்களில் தமிழ் இருக்கைகளின் நிலை?

வெளிநாடுகளில் வாழும் தமிழர்களுக்கும் தமிழ் மொழியைக் கற்க விரும்பும் பிற நாட்டவருக்கும் தமிழைச் சேர்ப்பது தேவையானது. அந்த வகையில் உலகப் புகழ் வாய்ந்த, அமெரிக்காவின் கார்வர்டு பல்கலைக் கழகத்தில் தமிழ் மொழிக்கு இருக்கை அமைப்பதும் அதற்கு அரசு நிதியுதவி அளித்ததும் வரவேற்கத் தக்க முயற்சிதான். ஏனெனில், கார்வர்டு பல்கலைக்கழக அரிச்சுவடிகள், தமிழை சமற்கிருதத்தின் கிளை மொழியாகவே கருதி வருகின்றன. அதை மாற்றும் முயற்சியாக, தமிழ் மொழி இருக்கை அமையும்.

நம் நாட்டில் உள்ள உயர் கல்வி நிறுவனங்களிலும் பல்கலைக் கழகங்களிலும் தொன்மைமிகு தமிழுக்கு எத்தகைய இடம் வழங்கப்பட்டுள்ளது என்பதை, அறிய வேண்டியது அவசியம்.

இந்தியப் பல்கலைக் கழகங்களில், சமற்கிருத மொழிக்கு, துறை அல்லது இருக்கை இல்லாத பல்கலைக் கழகங்கள் கொஞ்சமே. ஆனால், எத்தனை பல்கலைக் கழகங்களில் தமிழுக்கு இடம் அளிக்கப்பட்டிருக்கிறது என்பது முக்கியமான கேள்வி.

மொழிகளுக்கென தனிச்சிறப்புடன் நாடு முழுதும் ஆறு பல்கலைக்கழகங்களை உருவாக்கியுள்ள மத்திய அரசு, அவற்றில் மூன்றை, சமற்கிருத வளர்ச்சிக்குரிய நிகர் நிலைப் பல்கலைக் கழகங்களாக உருவாக்கி, நடத்தி வருகிறது. மீதமுள்ள மூன்றை, உருது, இந்தி, ஆங்கிலம் மற்றும் அயல் மொழிகளுக்கான, மத்திய பல்கலைக் கழகங்களாக அமைத்துள்ளது. 'தமிழ் செம்மொழி' என அறிவிக்கப்பட்டு, ஆண்டுகள் பல கடந்த பின்னும் தமிழுக்கு இத்தகைய சிறப்பிடங்கள் ஏன் அளிக்கப்படவில்லை என்பது வியப்புக்குரியது.

அதன் தொடர்ச்சியாக, தமிழ் மொழிக்கு இந்திய பல்கலைக் கழகங்களில் உரிய இடம் மறுக்கப்படுவதற்கான பின்னணியை ஆய்ந்தறிவதும் அவசியமானது. அன்றுமுதல் இன்றுவரை, மத்திய, மாநில ஆட்சியாளர்கள் இதில் கவனம் செலுத்தவில்லை என்பது முதல் காரணம்.

தமிழகத்தில் திராவிடக்கட்சிகள் ஆட்சிப் பொறுப்பிற்கு வந்த பின், தமிழ் மொழியின் பெருமையை உலகறியச் செய்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால், அவை முழுமையடைந்தனவா என்பதில் ஐயம் உள்ளது.

'தமிழே என் வாழ்வு, மூச்சு' என முழங்குபவர்கள்கூட, முழுமையான முயற்சிகளில் ஈடுபடவில்லை என்பது வருந்தத்தக்கது. இந்தியாவில் உள்ள பல்கலைக் கழகங்கள் அனைத்தையும் தம் ஆளகைக்குள் வைத்திருப்பதுடன், அவை இயங்குவதற் கான நிதியுதவியையும் வழங்கும் பல்கலைக்கழக மானியக்குழுவின் வழிகாட்டு நெறிமுறைகளிலும்கூட, தமிழ் மொழிக்கு பல்கலைக் கழகங்கள் வழங்க வேண்டிய சிறப்பிடம் குறித்த குறிப்புகள் இடம் பெறவில்லை.

அரசு மற்றும் தனியார் பல்கலைக் கழகங்களை, ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை ஆய்வு செய்து, அறிக்கை அளிக்கும் பல்கலைக் கழக மானியக்குழு, அந்தக் கல்வி நிலையங்களில், தொன்மையான மொழிகளுக்கு இருக்கை அல்லது துறை அமைக்க வேண்டியது அவசியம் என்பதை ஆணையாகவே பிறப்பிக்கலாம்.

அதற்குத் தேவையான சட்ட மசோதாக்களையும் சட்டத் திருத்தங்களையும் நாடாளுமன்றத்தில் கொண்டு வர முயற்சிக்கலாம். பல்கலைக் கழக மானியக் குழுவின் நெறிகளுக்கு கட்டுப்பட வேண்டியது, பல்கலைக் கழகங்களின் பொறுப்பு. இது, அம்மொழி யின் வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும் வலுசேர்க்கும் காரணியாக, வரலாற்றில் இடம் பெறும். 2009இல் நடந்த, 'புனெசுகோ' எனப்படும் ஐக்கிய நாடுகளின் கல்வி, அறிவியல், கலாச்சார அமைப்பின் கணக் கெடுப்பின்படி, நம் நாட்டில் புழக்கத்தில் உள்ள 196 மொழிகள் அழியும் நிலையில் உள்ளன என்ற அதிர்ச்சி தகவல் தெரிய வருகிறது.

அதைக் காக்க வேண்டிய பொறுப்பு, மத்திய, மாநில அரசுகளுக்கு உண்டு என, அறிவுறுத்தியுள்ளது. இந்தியா எனும் துணைக்கண்டம், பல மொழி, இனம், சமயம், கலாச்சாரம் ஆகிய பண்பாட்டுப் பதிவுகளைக் கொண்ட, பன்முகத் தன்மையுள்ள நாடு. இந்த தன்மையே, நாட்டின் அடிப்படையாகக் கருதப்படுகிறது.

ஆனால், 1963இல் இயற்றப்பட்ட இந்திய தேசிய மொழிச்சட்டத்தின்படி, இந்தி ஆட்சி மொழியாகவும் ஆங்கிலம் இணைப்பு மொழியாகவும் பின்பற்றப்பட்டு வருகிறது. இச்சட்டத்தில் 1976, 1987, 2007ஆம் ஆண்டு களில் சட்டத்திருத்தங்கள் மேற்கொள்ளப் பட்டன.

அந்த மொழிச்சட்டம், நாட்டின் பிற மாநிலங் களுக்குப் பொருந்துமே தவிர, தமிழகத்திற்கு மட்டும் விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. ஏனெனில், கடந்த காலங்களில் நிகழ்ந்த, இந்தி எதிர்ப்புப் போராட்டங் களால் மத்திய மாநில அரசு அலுவலகங்களில் தமிழை அலுவல் மொழியாகப் பயன்படுத்திக் கொள்ள வழி வகை செய்யப்பட்டுள்ளது. மற்ற மாநிலங்களைப் போல, அலுவல் மொழியாக இந்தி மற்றும் ஆங்கிலத் தைப் பின்பற்ற வேண்டிய கட்டாயம் தமிழகத்திற்கு இல்லை. இதை, மேற்கண்ட சட்டத்திருத்தங்களும் உறுதி செய்கின்றன.

தமிழகத்தைப் போலவே, மற்ற மாநிலங்களும் அம்மாநில மொழியை, அலுவலகங்களில் பயன்படுத்த வழிவகை செய்ய குரல் எழுப்புகின்றன. இந்திய அரசிய லமைப்புச் சபையின் எட்டாவது அட்டவணையில் உள்ள 22 மொழிகளையும் ஆட்சி மொழிகளாக அறிவித்து, அங்கீகரிக்க வேண்டும் என நாடு முழுவதும் அக்குரல் ஒலிக்க ஆரம்பித்து இருப்பதுடன் போராட் டங்களும் நடத்தப்படுகின்றன.

இக்கோரிக்கையின்படி மேற்கண்ட, 22 மொழி களும் அலுவல் மொழிகளாக வகை செய்வதுடன், அந்தந்த மாநிலங்களில் உள்ள, மத்திய மாநில அரசு அலுவலகங்களில் அம்மாநில மொழியே அலுவல் மொழியாக பயன்படுத்தப்படும். இத்தகைய முயற்சிகள், மாநில மொழிகளை அழியாமல் பாதுகாப்பதுடன், வளர்ச்சி பெறவும் துணை செய்யும். தேசிய மொழிகள் ஆட்சி மொழிகள் என்ற கண்ணோட்டத்தில் இம் மொழிகளுக்கு உரிய சிறப்பிடம், நாடு முழுவதும் உள்ள உயர் கல்வி நிறுவனங்களில் வழங்கப்படும்.

ஆட்சிமொழிச் சட்டத்தின்படி, எல்லா மாநிலங் களிலும் உள்ள கல்வி நிறுவனங்களில் 22 மொழி களுக்கும் துறைகளும் இருக்கைகளும் அமைப்பது கட்டாயமாக்கப்படும். நாட்டின் தேசிய மொழியாக எதை அறிவிக்கலாம் என்ற விவாதம் எழுந்த காலத்தில் 'தமிழ் மொழிக்கு மட்டும்தான் தேசிய மொழியாக ஆக்கப்படும் தகுதி உண்டு' என அறிஞர்களும் கல்வி யாளர்களும் கூறி, இலக்கிய, இலக்கண ஆதாரங்களை முன் வைத்தனர்.

அத்தகைய உயர்தனிச் செம்மொழிக்கு, அக்காலத் திலோ அல்லது அதற்குப் பிறகோ, நாட்டின் வரலாற் றில் அளிக்கப்பட்டுள்ள சிறப்பு நிலைத்தகுதி என்ன என்பது குறித்து சிந்திப்பது அவசியம்.

வட மாநில பல்கலைக் கழகங்களான பனாரசு இந்து பல்கலைக்கழகம், டில்லி பல்கலைக்கழகம், அலிகார் முசுலீம் பல்கலைக்கழகம், சவகர்லால் நேரு பல்கலைக்கழகம், ஆக்ரா பல்கலைக்கழகம், டில்லி லேடி திருராம் கல்லூரி, சண்டிகர் பல்கலைக் கழகம், பட்டி யாலா பல்கலைக்கழகம், கல்கத்தா பல்கலைக் கழகம், பஞ்சாப் பல்கலைக்கழகம், அலகாபாத் பல்கலைக்கழகம், லக்னோ பல்கலைக்கழகம் ஆகியவற்றில் தமிழுக்கென தனித்த துறைகள் அமைக்கப்பட்டன.

ஆனால், தற்போது இவற்றில் எத்தனை பல்கலைக் கழகங்களில் உரிய பேராசிரியர்கள் மற்றும் ஆய்வுக் களங்களுடன் தமிழ்த்துறை இயங்கி வருகிறது என்பது கேள்விக்குறியே. இவற்றில் டில்லி பல்கலைக்கழகம் சவகர்லால் பல்கலைக்கழகம், லக்னோ பல்கலைக்கழகம் ஆகியவற்றில் மட்டுமே, தமிழ்த்துறை இயங்கி வருகிறது. எனினும் வளர்ச்சி நோக்கிய வகையில் அவற்றின் இயக்கம், செயல்பாடு போற்றத்தக்கதாக இல்லை. அங்கதான் அப்படி என்றால், திராவிட மொழிகளின் தோற்றுவாயான தென் மாநிலங்களின் பல்கலைக் கழகங்களில் இதைவிட மோசமான நிலைதான் உள்ளது.

கேரளப் பல்கலைக்கழகம், ஐதராபாத் பல்கலைக் கழகம், உசுமானியா பல்கலைக்கழகம், ஆந்திரப் பல் கலைக்கழகம், திருப்பதி வேங்கடேசுவரா பல்கலைக் கழகம், குப்பம் திராவிட பல்கலைக்கழகம், பெங்களூரு பல்கலைக்கழகம், மைசூரு பல்கலைக்கழகம், பம்பாய் பல்கலைக்கழகம் போன்றவற்றிலும் தமிழ்த்துறை இயங்கி வந்தது. இப்போது, இவற்றில் பெரும்பாலான பல்கலைக் கழகங்களில் தமிழ்த்துறை முறையாக இயங்கவே இல்லை.

பேராசிரியர்கள் பணியிடங்கள் நிரப்பப்படா மலேயே உள்ளன. இது குறித்து சிந்திப்பதற்கும் இயங்குவதற்குத் தேவையான நிதி மற்றும் உழைப்பை வழங்குவதற்கும் மத்திய, மாநில அரசுகள் தயாராக இல்லை. அந்தப் பல்கலைக் கழகங்கள் அமைந்துள்ள மாநில அரசுகளுக்கு, அறிவுறுத்தவதற்கு கற்றறிந்த அறிஞர்களுக்கும் கல்வியாளர்களுக்கும் நேரமில்லை.

குறிப்பாக, மொழிவாரி மாநிலங்கள் பிரிக்கப்படாத, 1947இல் உருவாக்கப்பட்டு, பேராசிரியர்கள் சி.இலக்கு வனார், அ.மு.பரமசிவானந்தம், டி.சிங்காரவேலு போன்ற மூத்த அறிஞர்கள் அலங்கரித்த, உசுமானியா பல்கலைக்கழக தமிழ்த்துறை, தற்போது முழுதாக இயங்கவில்லை.

மும்பை, ஐதராபாத் பல்கலைக் கழகங்களிலும் இந்த நிலைமைதான். வடமாநிலங்களில் சரி, தமிழகத்தின் நிலை இன்னும் கீழானது.

'பாரதிதாசன் தெருவில் தமிழ்தான் இல்லை' என கூறுவதைப் போல, இங்குள்ள பல்கலைக் கழகங்கள் மற்றும் கல்லூரிகளில் பெயருக்குதான் தமிழ்த்துறை இருக்கிறது. அவற்றின் செயல்பாடு முற்றிலும் முடங்கி இருப்பது ஆட்சியாளர்களின் பார்வைக்கு எட்டாமல் இருப்பது வியப்புக்குரியதே!

நன்றி: முனைவர். **ரா.பன்னிருகை வடிவேலன்**
pann1973gmail.com

# தமிழோசை



உலகில் ஓசைகளை கேட்டுணர்ந்த நாட்களிலேயே, அந்த ஓசைகளை மொழியாக மாற்றி, தமிழோசையாக முழுமைப்படுத்தினான் மனிதன். கல்தோன்றி மண் தோன்றாக் காலத்தே வாளோடு முன் தோன்றிய மூத்த குடி தமிழ்க்குடி என்பது, முன்னோர் கூற்று. உலகில் முதலில் தோன்றிய மனிதன் தமிழன், தமிழன் பேசிய மொழி தமிழ்.

இங்கே ஏன் தமிழோசை என்று கூறுகிறோம் என்றால் இயற்கை உள்ளிட்ட, உலகில் உள்ள படைப்புகள் அனைத்திலும் இருந்து எழுந்த ஓசைகளை மொழியாக்கினான் தமிழன். அதுதான் தமிழ். தமிழ் ஒரு இயற்கையின் படைப்பு என்று சொல்வது மிகச்சரியானது.

தமிழ் இயற்கையின் படைப்பே. எப்போதுமே மனிதன் உருவாக்குவதைவிட இயற்கைக்கு சிறப்புகள் அதிகம். தமிழ் இயற்கையால் வந்தது என்பதாலேயே கவிஞன் சொன்னான் உலகமெல்லாம் தமிழோசை பரவும் வகை செய்ய வேண்டும் என்று.

தமிழோசை ஒவ்வொரு நொடியும் பிறக்கிறது. மனிதப்பிறப்பில் பிறக்கும் குழந்தையின் அழுகை ஓசை, மழலைங்கு என்று தனது குரலை உலகுக்கு அறிமுகப் படுத்தி தாத்தா, அத்தை, அம்மா, அப்பா என்றெல் லாம் பேசும்போது, தமிழோசை வளர்கிறது. வளர்கிற தமிழோசை நம்மையெல்லாம் மகிழ்ச்சியின் உச்சிக்கே கொண்டு போய்ச் சேர்க்கிறது.

இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழால் தமிழோசை உலகை மகிழ்வித்து வருவதோடு, உலகு அறநெறி தவறாது சுழல உதவுகிறது என்பதை, தமிழ் அறிந்தவர்கள், தமிழோசையை செவி மடுத்தவர்கள் உணர்வார்கள். தமிழன் பேசுகின்றவைகள், உரையாடல்கள், கருத்துரைகள், அறவுரைகள் எல்லாம், இயல் என்ற ஒன்றிற்குள் ஒன்றாக, நின்று தமிழோசையை நாளும் மக்களுக்குத் தந்து கொண்டிருக்கின்றன. தமிழ் மக்களின் தாலாட்டில் தொடங்கி, உழவுப்பாட்டு, நடவுப்பாட்டு, ஏற்றப்பாட்டு, கதிர்அறுப்புப் பாட்டு என்று, பணிகளின் அடிப் படையில் பல வடிவங்களிலான இசையை தமிழோ சையாக வெளிப்படுத்தி, மனிதனின் நிறைவுக்காலமான இறப்புக் காலத்தில் ஒப்பாரிப்பாட்டு என்ற இசையுடன், தமிழோசை தமிழ் மக்களால் உலகுக்கு கொடுக்கப் பட்டுக் கொண்டிருக் கிறது.

தமிழன் சமூகத்திற்கு தெரிவிக்க வேண்டிய கருத்துகளை, சமூகத்தைச் சீர்படுத்தத் தேவையான கருத்துகளை நாடக வடிவிலே கொடுத்துக் கொண்டிருக்கிறான். இது காலம் காலமாக நடந்து வருகிறது. கூத்து என்ற கலை, நாடகக்கலை, திரைக்கலை என்று பல பெருக்கங்களைக் கண்டுள்ளது. இக்கலை தமிழோசையை நாளும் நானிலத்தில் ஊற்றிக் கொண்டே இருக்கிறது.

இவைகள் மட்டுமல்லாது பல்வேறு துறைகளில், பல்வேறுவகைப்பட்ட சூழல்களில் தமிழோசை இந்த நிலவுலகில் நின்று நிலவி வருகிறது. தமிழோசையை உணராத செவிகள் செவிகள் அல்ல என்று கூறும் படியான பெருமை படைத்தது தமிழோசை. இத் தமிழோசை, மனிதன் இவ்வையகத்தில் இருக்கும் வரை, இயற்கை இப்புவியை வளப்படுத்தி வைத் திருக்கும் வரை வாழ்ந்து கொண்டே இருக்கும்.

என் தமிழோசை கேட்ட என்னருமைத் தமிழ்ப் பெருமக்களுக்கு எனத தலையைத் தாழ்த்தி வணக்கத் தைக் கூறிக்கொள்கிறேன். வாழ்வோம் இயற்கை யோடும் தமிழோசையோடும். நன்றி! வணக்கம்!!.

**ஆரோக்கிய சார்லஸ்,** தஞ்சை



Owned, Published and Printed by **V. Thalapathi,** Published from No. 13/5 Buddha Street, Rangarajapuram, Kodambakkam, Chennai - 24. and Printed at **DESIGNS PARK,** No. 22 Weavers Street Triplicane, Chennai-5, Editor: **V. THALAPATHI.**




அருந்தலைவர் நல்லக்கண்ணு அவர்களை முற்றம் ஆசிரியர். விசவனூர் வே. தளபதி அவர்கள் சந்தித்து முற்றம் இதழையும், முற்றம் இதழில் தொடராக வெளிவந்த திரு. இராஜாசிங் அவர்களின் உண்மையைத் தேடி நூலையும் கொடுத்து வாழ்த்துப் பெற்றார். அருகில் ரஜினி லாசரஸ், கோவில்பட்டி அமலி.



மேனாள் நாடாளுமன்ற உறுப்பினர் திருமிகு. ஜே. எம். ஹாரூண் அவர்களுடன் விசவனூர் வே. தளபதி, வழக்கறிஞர் ஆரோக்கியதாஸ், திரு. சைதை மணிமாறம், திரு. எட்வர்ட்.

MUTRAM - Tamil & English Monthly RNI No. TNBIL/2010/36924.

